ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ. 3—0
6 மாத சந்தா ,,	— ,, 1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு பங்குனி-மீ 27-உ (9—4—1933) | மலர் 50.

லெனினும், மதமும்.

இது ரஷ்யர்களின் மதப் பித்தையும், கடவுளுணர்ச்சியை ஒழித்து ஏழை பணக்காரன் என்கின்ற தன்மை அழித்து பொது உடைமைக் கொள்கையை நிலை நாட்டிய தனிப்பெரும் வீரர் தோழர் லெனின் அவர்களால் மதத்தைப் பற்றி எழுதியதாகும். இதைப் படிப்பதால் மதம் பணக்காரர்களுக்கும் முதலாளி அரசாங்கத்திற்கும் எவ்வளவு தூரம் உதவி செய்கின்றது என்பது விளங்கும்.

விலை அணா 0—4—0 சந்தாதாரர்களுக்கு விலை அணா 0—3—0

இந்தியாவின் குறைபாடுகள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டெம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"
பெரிய புத்தகம். விலை ரூ. 2.
(தபால் சார்ஜ் வேறு)
குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் ஹு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

"கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதை சவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட சைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ தோழர்கள் ஈ. வெ. ரா. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி

1க்கு 0-8-0

ஷை $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ சயிஸ் 1க்கு 0-12-0

ஐரோப்பாவில் எடுத்த

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சயிஸ் தனிப்

போட்டோ burst 1க்கு 0-8-0

15 x 12 என்லார்ஜ் மெண்டு ஷை காப்பி 1க்கு 10-0-0

23 x 17 ,, ,, 17-0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரு விதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—
நியூஸ்டார் போட்டோஸ் டுடியோ,
ஸ்டேஷன் ரோட்,
கோயமுத்தூர்.

மணமகள் தேவை.

இருபத்திரண்டு வயதுடையவரும் பூரண சுயமரியாதைக் கொள்கையுடையவரும், மதராஸ் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவரும், இலங்கையில் தேயிலை தோட்டத்தில் கிளார்க் வேலை செய்பவரும் மாதமொன்றுக்கு ரு. 80. சம்பளமுடையவருமான இந்து நாடார் வாலிபரொருவருக்கு ஒரு மணமகள் தேவை. கீழ்கண்ட விலாசத்திற்கு பிரியமுள்ளவர்கள் எழுதவும்.

சீர்திருத்தப்பிரியன்,
C/o குடி அரசு, ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பாம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

உங்கள்.

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta

அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.

(govt Rgd)

உங்களுடைய டிரேட் மார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XVI நெம்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண் கோ.,
கடைவீதி, ஈரோடு.

சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணா, 0—4—0.

விலாசம்:—
குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் எற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

சுகானந்த பானச்சூரணம்.

தெக்ஷணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலையில் தயார் செய்யும் சுகானந்த பானச்சூரணம் காபி பானத்திற்குப் பதிலாகத் தயார் செய்தது. அனேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ளது. காபியின் மணம் கலந்துளது. இரத்த சுத்தி, ஞாபகசக்தி, வேலையில் சுறுசுறுப்பு முதலியவைதரவல்லது.

காபிபானத்திற்குப்பதிலாக அநேகர் வேண்டுதலின் பேரில் தயாரிக்கப்பெற்ற இச்சூரணம் காப்பித்தூளைப்போல கொதி தண்ணீரில் போட்டு கஷாயமெடுத்து பாலுடன் கலந்தாவது அல்லது தனிப்பாலை காயவைத்து அதில் ஒரு தேக்கரண்டி அளவு சூரணம் போட்டு சர்க்கரை கூட்டிக்கலந்து பருகிவரின் வெட்டைச்சூடு, மெலிவு, நீர்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம் பலஹீனம் முதலான அனேக வியாதிகளைக்கண்டிக்கும்.

எமது "சுகானந்த பானச்சூரணம்" ஒன்றே பொருத்தமாயுளது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் உபயோகிக்கலாம். இன்றே ஒரு டப்பி வாங்கி உபயோகித்து உண்மையையுணருங்கள்.

அன்பர்கள் இச்சூரணத்தைக்கொண்டு காபி, டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக உபயோகித்துவரின் காபியை மறந்து காபியின் கெடுதல் குணம் நீங்கப்பெற்றுஇச்சூரணத்தின் அபூர்வ சக்தியினால் அநேக வியாதிகளுக்குக் காரணமாகிய மலச்சிக்கல் நீங்கப்பெற்று ஆரோக்கிய வாழ்வு பெறுவார்களென்பது நிச்சயம். எமது வைத்தியசாலையில் எல்லா வியாதிகளுக்கும் எந்த நேரத்திலும் மருந்துகள் கிடைக்கும். இங்ஙனம்,

நா. நடசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெக்ஷிணாமூர்த்தி தமிழ்வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம் ஜில்லா.

புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் டானிக்.

மன்மத குளிகை

எந்தக்காரணத்தினாலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை வீரியவிர்த்தி முதலியவைகளைக்கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரு. 2—0—0 60 குளிகை ரு. 5—0—0.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு, நாகபட்டணம்.

சுயமரியாதை இயக்கத்தின் பூர்வாங்க வேலை.

ஈ. வெ. இராமசாமியின் இடைவிடா உழைப்பு.

“விடுதியின்றி தவித்த வனசாரியின் கோபத்துக்கு ஆளான மன்னர்கள்”

ஆண்கள் சமூகத்தைத் தவிடுபொடியாக்குவதே பெண்கள் விடுதலை.

‘சமூகக்கொடுமைகளுக்கு தஞ்சமான அரசியல் அடிமைத்தனம்’

நாட்டை விடுவிக்கும் எல்லாப் பொறுப்பும் சுயமரியாதை இயக்கத்துடையதே.

முடிவு கட்டுவதில் முதியவர்களுக்கென்ன வேலை.

8, 9-1-33 சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெற்ற ஷை மகாநாட்டில் தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு பேசியது:—

தோழர்களே!

இம்மகாநாட்டிற்கு தமியேனை தலைமை வகிக்குமாறு பெரிதும் விரும்பிய தோழர்களுக்கும், வரவேற்புக்கழக அங்கத்தினர்களுக்கும் நான் நன்றி செலுத்துகின்றேன். சென்ற இரண்டு வருஷங்களுக்குள்ளாக இந்த ஜில்லாவில் நடைபெற்ற மகாநாடுகளுள், இது மூன்றாவதாகும். இதிலிருந்தே இங்கே சுயமரியாதை இயக்கம் எவ்வளவு பலமிருக்கிறதென்பதும், இளைஞர்களிடையே எவ்வளவு தூரம் தீவிரமான உணர்ச்சியையும், ஊக்கத்தையும் கிளப்பிவிடப்பட்டிருக்கிறதென்பதும் ஒருவாறு புலப்படும். இம்மகாநாட்டின் போக்கிற்கு கட்டுதிட்டங்கள் விதிக்க நான் விரும்பவில்லை. இந்த இயக்கத்தின், போக்கு, நோக்கம், எவ்வளவு பணியாற்ற முடியுமென்னும் திட்டம் ஆகிய வற்றைக்குறித்து நன்கு தெரிந்து தக்க ஆதாரமுள்ள நிலையில் இந்த இயக்கத்தை அமைக்கவேண்டிய பெரும் பொறுப்பை இம்மகாநாடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். தற்போதைய நிலையை நீங்கள் நன்குணர்ந்து, இம்மகாநாடு இனிது முடிவுற உதவுவீர்களென்று நம்புகிறேன்.

இந்த நாட்டிலே சயமரியாதை இயக்கம் செய்துள்ள கிளர்ச்சியைப் போல் வேறெந்த இயக்கமும் மக்கள் ஞாபகத்திற்கெட்டிய வரை செய்ததாக தெரியவில்லை. இந்த இயக்கத்தை தோழர் ஈ வெ. ராமசாமி 1926-ஷு ஆரம்பித்தார். இந்த இயக்கமே பொது ஜனங்களின் இயக்கமாகும். இந்த இயக்கம் பொதுஜனங்களின் மீது முழு நம்பிக்கை கொண்டு அவர்களின் பெரும் ஆதரவை வெகுவாக பற்றி நிற்கிறது. அன்றியும் இந்நாடு சமீபத்தில் அனுபவிக்கப்போகும் பெரும் நெருக்கடிக்கு இந்த இயக்கம் மூலகாரணமாகவுமிருக்கும். இந்த இயக்கம் அழிந்துபட்டு விடுமென பலர் கூறினர். ஆனால் இந்த எட்டுவருஷங்களுக்குள்ளாக பொது மக்களின் நம்பிக்கையைபெற்றே வாழ்ந்து வருகிறது. சுயமரியாதை இயக்கத்தின் சரித்திரத்தை குறித்து, தெளிவாக தெரிந்து கொள்ளுதல், பயனுடையதேயாகும். நாம் இதுகாலை எந்நிலையிலிருக்கிறோமென்றும், எப்போக்கில் போய்க்கொண்டிருக்கிறோமென்றும் நாம் தெரிந்துகொள்வோமானால், இனி நாம் செய்யவேண்டியவை எவையென்பதுபற்றியும், அவைகளை எங்ஙனம் செய்யவேண்டுமென்பது பற்றியும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

1914-18ம் வருஷங்களில் நடைபெற்ற மகாயுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும், விடுதலை உணர்ச்சி என்னும் மாருதம் வெகுவாக வீசியது. முடிகள், குடிகள் என்றும், எஜமானன், சேவகன் என்றும், லக்ஷாதிபதி, பிக்ஷாதிபதி என்றும், ஆக்கமுள்ளவர், சார்ந்திருப்பவரென்றும் உள்ள புராதீன கருத்துக்களை புதிய விடுதலையுணர்ச்சி அடியோடு தகர்த்தெரிந்து கொண்டு வருவதோடு, தன் நலமிக்கவரும் தந்திரமான அரசியல் புரட்டர்களும், மதப்பற்றுடையவர்களும், ஏதேச்சாதிகாரிகளானஏகாதிபத்திய செருக்கர்களும் ஜனசமூகத்தை தங்கள் காலின்கீழ்வைத்து நசுக்கும் கொடுமைகளையொழித்து சர்வ ஜனங்களிடையே சமதர்மத்தையும், விடுதலையையும், உணர்ச்சியையும் ஊட்ட வேண்டுமென்ற புதிய சக்தி தழைத்தோங்கிக்கொண்டு வருகிறது. இச்சக்தி தழைத்தோங்கிய ஒரு காரணமே ஆப்கனிஸ்தான், துருக்கி, ருஷ்யா, முதலிய நாடுகள் இன்று அடைந்திருக்கும் உன்னத நிலைக்கு அடிப்படையாகும்.

மதசம்பந்தமற்ற முறையில் வாழ்க்கை நடத்தும், நெறியை முஸ்தபா கமால் பாஷா வகுத்தார். சௌரியா ராணி அவர்கள் முகமூடியை விடுத்து விட்டு பெண்கள் விடுதலைக்கு பெருக்க மளித்தார். ஸார் ஆட்சி முறையின் கொடுமைகளை ருஷ்யா அடியோடு ஒழித்து விட்டது. இவையிது வரைஅகில உலகத்தின் சரித்திரத்திலேயே கண்டிராததோர் புதிய சகாப்தத்தை உண்டு பண்ணி விட்டது. இப்புதிய உணர்ச்சி இந்தியாவிலும் பரவியது. இந்த உணர்ச்சி செயலளவிற்கு பகிரங்கமாக கொண்டு வந்து, ஹோம்ரூல் இயக்கத்தையும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும் தோற்றுவித்துப் பெரும் பொறுப்பு சென்னைக்கு ஏற்பட்டது.. இவைகளுள் முன்னைய இயக்கம் அரசியல் விடுதலைக்காகவும், பின்னைய இயக்கம் சமுதாய சமத்துவத்திற்காகவும், தோன்றின. மக்கள் தேவைகளுக்கு இன்றியமையாததான விடுதலை, சமத்துவம், ஆகிய இரு தத்துவங்களைக் குறித்தும், பிரஸ்தாப இரு இயக்கங்களும் கற்பிக்கும் முக்கிய பேதங்கள் காரணமாகவே அவை இரண்டும் சேர்ந்து பணியாற்ற முடியவில்லை. எனவே ஹோம்ரூல் இயக்கம் காங்கிரசுடன் இரண்டறக்கலந்துவிட்டது. பிராமணரல்லாதார் இயக்கம் சர்க்கார் சம்பந்தமுடையதாகக் கருதப்பட்டு சமுதாய சமத்துவ நிலையை அடைய பிரஸ்தாப இயக்கம் வகுத்திருந்த லக்ஷியங்கள் மிக மிகக்குறைபாடுடன், நாடு சமுதாய இருளில் மூழ்கிக் கிடந்ததால் மகத்தான ஆபத்துண்டென தெளிவாய் அறிந்திருந்தும் கூட பிராமணரல்லாதார் இயக்கமானது மத சம்பந்தமான சடங்குகளை நீக்கியும் ஜாதி முறை பாகுபாடென்னும், கொடுமையான கட்டுதிட்டங்களை சமரசப்படுத்தியும், மதத்தை மூலாம்பூச முயற்சித்துடன் தீண்டப்படாதார் கேவல நிலையையும், பெண்கள் நிலையையும், முன்னேற்றவும் மதத்தை பாதுகாக்கவும் முயற்சித்தோடு நின்றுவிட்டது. புராதீன வேதகால முதற்கொண்டே சீர்திருத்தக்காரர்கள் தோன்றியிருக்கிறார்கள். புத்தர் உள்ளபடியே சீர்திருத்தக்காரர்தான். சங்கராச்சாரியார் சமூகத்தை சீர்திருத்தி புத்தர் ஆற்றிய அரும் பணிகளை எல்லாம் அழித்து இந்து மதத்தின் புனிதத்தை நிலைநாட்டுவோராக தோன்றினர். முஸ்லீம் ஆக்ஷிகாலத்தில் கபீரும், குருநானக்கும், சைதன்யரும் தோன்றியிராவிட்டாலும், பிரம்மசமாஜமும், ஆரிய சமாஜமும் இக்காலத்தில் தோன்றியிராவிட்டாலும், தற்போது இந்துக்களின் எண்ணிக்கையைவிட மிகுந்தவர்களாக முஸ்லீம்களும், கிருஸ்தவர்களுமிருப்பார்கள். இந்த சீர்திருத்தகாரர்களை இன்றும் புகழ்ந்துகொண்டிருப்பதை தவிர ஜனசமுதாயத்திற்கு கிடைத்தபலன் ஒன்றுமில்லை. ஏற்கனவே காணப்பட்ட ஜாதிப்பிரிவுகளின் எண்ணிக்கையைப்பெருக்கவே பிரஸ்தாப சீர்திருத்தக்காரர்களின் வேலைகள் பிரயோஜனப் பட்டன. புரோகிதர்களும், முடிமன்னர்களும், ஒரே இனத்தவராதலால், ஏற்பட்ட நிலைமைகளில் சிறிதும் வித்தியாசமில்லை. எனவே மேற்கூறிய ஸ்தாபனங்களைவிட இந்த பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் எந்த விதத்திலும் மேன்பட்டதாகவில்லை. ஆகவேதான் பிராமணரல்லாதாரின் இயக்கத்தின் லக்ஷியம் ஈடேறவில்லை.

புது உலகத்தின் நிலைக்குத்தக்கபடி விஷயங்களையும் சரிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமாகிறது. மக்கள் வாழ்க்கையின் அடிப்படையான முறையில் முழு மாறுதல் செய்ய வேண்டியதே அவசியமான முதல் வேலையாகிறது. தற்போதுள்ள நிலையில் தீவிர மாறுதல் ஏற்படவேண்டியதவசியமாகும். ஆனால் நமது நோக்கம் ஈடேறுதற்கில்லாத அளவுதான் சீர்திருத்தம் பயன்பட்டது. எனவே ஜனசமுதாய நிலையை புனருத்தாரணம் செய்ய வேண்டிய திட்டத்தை வகுத்து அதை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அக்காலத்திற்கேற்ற உணர்ச்சி காரணமாக 1926ம் ஆண்டில் தோழர் ஈ. வெ. இராமசாமியவர்கள் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார். இந்த இயக்கத்தின் கருத்துகளைப்பற்றியும், கொள்கைகளைப்பற்

தியும், "குடி அரசு" முதலாவதுதொகுதியின் தலையங்கத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

"மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும் சகோதரத்துவமும் தோன்ற வேண்டும். ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவனென்ற எண்ணம் அகல வேண்டும். உலகுயிர் அனைத்தும் ஒன்றேனும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். மேற்சொன்ன கோள்கைகளை பரவச் செய்வதற்காக நாம் உழைக்கும் காலத்தில் நம்மை தாக்குபவர்களுடைய வார்த்தைகளையாவது, செய்கைகளையாவது நாம் சிறிதளவும் பயமின்றி சிநேகிதர் விரோதி என்கிற வித்தியாசமில்லாமல் யாவரையும் கண்டிக்க நாம் பயப்படப்போவதில்லை."

இந்தக்கொள்கையைகாரணமாக இந்தக்கொடுமைகளை யெல்லாம் நேர்முகமாக வெளிப்படுத்தி ஒருவனையொருவன் கொள்ளையாட முயற்சிப்பதைத் தடுக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறது.

தற்போதைய சமூக நிலை.

நமது இயக்கத்தின் வேலைகளைக் குறித்து விவாதிக்கும் முன்பாக, தற்போது நம் சமூகங்களின் நிலை எப்படி இருக்கிறதென்று கூற விரும்புகிறேன். கடந்த 2500 வருஷங்களுக்கு மேலிருந்தே புராதின ஆரியமதம் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறது. 10000ம் ஆண்டுகளுக்கு முன்புங்கூட இம்மதம் இருந்ததாக தோழர் பால கங்காதர திலகர் கூறியிருக்கிறார். சமீபகாலத்தில் 12கோடி ஜனங்களின் சமுதாய வாழ்க்கையில் இஸ்லாம் மதமும், கிருஸ்து மதமும் புகுந்து பெருமிதமுற்றிருக்கின்றன. தற்போதைய சமூக நிலைக்கு மேற்கூறிய மூன்று மதங்களும், மற்றுஞ் சில சிறு மதங்களுமே காரணங்களாம். 20 கோடி எண்ணிக்கையுள்ள ஜனங்களை மிகப் பலவீனப்படுத்தி ஒற்றுமை யில்லாமல் செய்ததற்கு முக்கிய காரணம் இந்து மதமேயாகும். 7 கோடி மக்கள் நெடுங்காலமாகவே தீண்டாதாரென்றும், அணுகக்கூடாதென்றும் தள்ளப்பட்டிருக்கின்றனர். 11 கோடி பெண்மக்களோ மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். நாட்டின் அரசியல் வாழ்க்கையிலோ, சமுதாய வாழ்க்கையிலோ அவர்களுக்கு பங்கில்லை. எத்தகைய சொத்துரிமையும் அவர்களுக்குக்கிடையாது. 8 வயதிற்குட்பட்ட 10 லக்ஷம் பெண்களுள்பட 4 கோடிப்பெண்கள் சித்திரமாக விதவைகளாக இருக்கின்றனர்; 10 லக்ஷம் பெண்கள் விலைமாதர்களாகவும், கொண்டவன் குழலிக் கல்லாகவுமிருக்கின்றார்கள். இதற்கு மதமும் அனுமதித்தே நிற்கிறது. சமூகமும் சகித்துக் கொண்டுதானிருக்கிறது.

13 கோடி உழவர்களும், தொழிலாளிகளும் நாள்தோறும் பட்டினி கிடக்கும் வாழ்க்கையில் நலிவுறுகிறார்கள். இளைஞர்களோ தம் பெற்றோர்களின் எதேச்சாதிகாரத்திற்கடங்கி மனச் சோர்வுற்று கையுங்காலும் கட்டுண்டிருக்கின்றனர். வர்ணாசிரமம் தன் ஜாதிக்கொள்கையைக் கொண்டு பிறவியினால் பேதங்கற்பித்து மக்களுக்குள் வேற்றுமையுண்டு பண்ணி வைத்திருக்கிறது. சிறுபான்மையோராய் உள்ள 100க்கு 3பேர்களால்தங்கள் மதசம்மந்தமான பழக்க வழக்கங்களையும், நடைநொடி பாவனைகளையும், ஏனைய 97 பங்கு மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இவர்கள் இந்தியாவின் புராதீன மக்கள். இவர்கள் விரும்பாததும், இவர்களின் இயற்கைக்கு மாறானவையுமான பழக்கவழக்கங்கள் இவர்கள்மீது சுமத்தப்படுகின்றன. பல மதங்களை பின் பற்றுகிறவர்களுக்குள்ளும் பூசலில்லாத நாள் கிடையாது. அநேக சீர்திருத்தக்காரர்களும், சீர்திருத்தஸ்தாபனங்களும் தோன்றியபோதிலும் கூட, புரோகிதர்களின் கொடுமைகளும், எதேச்சாதிகாரிகளின் கொடுமைகளும் நடைபெறத்தான் செய்கின்றன.

நாட்டின் பரப்புக்குறைவு, நிலவளமின்மை, ஜனத்தொகைக் குறைவு, மக்களின் அறிவு ஆற்றலின்மை ஆகிய நான்கும் நாட்டின் நலிவிற்கு முக்கிய காரணங்களாம். இந்நான்கு காரணங்களும் இந்தியாவில் கிடையாது. ஆனால் நாட்டின்செழுமைக்கும் நாகரீக வளர்ச்சிக்கும் முக்கிய காரணங்களாய் உள்ள அனைத்தும் இந்தியாவில் மலிந்திருக்கின்றன. கைத்தொழில்களும், விவசாயமும் வெகுவாய் பயில்வதற்கு அளவற்ற சாதனங்கள் இந்தியாவிலிருந்தாலும் இந்நாட்டு மக்கள் வலியராகவும், பலவீனராயுமிருக்கக் காரணமென்ன? இதற்கு இருவகை காரணங்களுண்டு.

முதலாவதாக உபயோகமற்ற மதமிருப்பது. இதற்கு உதாரணமாக தோழர் எஸ். ஆர். மாண்டேகு கூறுகிறார்:—"மதம் நோக்கங்களின் தற்கால தேவைகளுக்கு ஒரு சிறிதும் பயன்படாததும் உணர்வற்றதும், கொடுமை மிக்கதும், இளகுதல் சிறிதுமில்லாததும் மிகப் பண்டைக்காலத்தியதுமானதோர் சர்க்கார்."

சுயமரியாதை இயக்கத்தின் பூர்வாங்கவேலை!

புரோகிதர்களின் கொடுமைகளைக் குறித்தும், பெண்களும், தாழ்த்தப்பட்டாரும் விரைவில் விடுதலைபெற வேண்டிய அவசியத்தைக் குறித்தும் சாதிபேதம் ஒழியவேண்டியதின் அவசியத்தைக் குறித்தும் தோழர் ஈ. வெ. ராமசாமி 1926ம் வருஷம் முதல் ஆரம்பித்து தொடர்ந்து சொற்பொழிவுகளாற்றி வெகுவாய்ப் பிரசாரம் செய்தார். சுயநலமிக்கவர்கள் இந்த ஆரம்ப வேலையை பலம் கொண்டவரையில் எதிர்த்தார்கள். சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சியை குலைக்க செய்த மகத்தான எதிர்ப்பெல்லாம் இயக்கத்தார் செய்யும் வேலையின் பயனைவிட மக்களிடை இந்த இயக்கம் பரவுவதற்கு எதிரிகளின் வேலையே பன்மடங்கு பயன் பட்டது. தேசிய புனருத்தாரணம் என்னும் பரந்த பிரச்சினையின் ஒரு பகுதியான சமூகத்துறையில் மட்டும் சுயமரியாதை இயக்கம் ஈடுபட்டிருந்தே ஒழிய அரசியல் துறையில் ஈடுபடவில்லை. இதுவரை இதே முறையைத்தான் சுயமரியாதை இயக்கம் பின்பற்றி வந்திருக்கிறது. இதுவரை, காங்கிரஸ் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத நிலையில் மட்டும் சுயமரியாதை இயக்கம் இருந்து வந்ததும் அரசியல்கொள்கை எதையும்வகுக்க அது கருத்துக்கொள்ளவில்லை.

சென்ற 1929ம் வருஷம் பிப்ரவரி மீ மத்தியில் செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் தான் சுயமரியாதை சங்க மூலம் சுயமரியாதைக்கொள்கைகள் வகுக்கப்பட்டன. இச்சங்கத்திற்கோர் அமைப்பும் ஏற்பட்டது. இன்னின்னார்தான் அங்கத்தினர்களாகலாமென வரையறுக்கப்பட்டது. அங்கத்தினர்களனைவருக்கும் பொறுப்புள்ள மத்திய நிர்வாகசபை ஏற்படுத்த அந்த அமைப்பில் இடமேற்பட்டது. சமுதாய நிலையை மாற்றியமைத்து அதன் மூலம் தனிப்பட்ட நண்பர்களுக்குங்கூட விடுதலை சமத்துவம், நீதி ஆகியன வழங்குவதே இந்த இயக்கத்தின் கொள்கை எனக்கூறப்பட்டது. ஒவ்வொரு ஊரிலும் சுயமரியாதைச்சங்கங்கள் தோற்றுவிக்க இச்சங்கம் அனுமதித்து நிர்வாகசபை ஈரோட்டில் கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுக்கூட்டங்களில் பிரசாரங்களின் மூலம் பிரசாரம் செய்வது மட்டுமன்றி இந்த இயக்கம் வேருன்றிக்கொள்ளவேண்டி அவ்வப்போது ஆங்காங்கு, மகாநாடுகளை நடத்தும் முறைகளையும் கைக்கொண்டது. சென்னை மாகாணத்தின் முதல் மகாநாடு 17-2-29ல் செங்கற்பட்டில் தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. தலைமையில் நடைபெற்றது. அப்போது முதன் மந்திரியாக இருந்த தோழர் டாக்டர் பி. சுப்பராயன் தோழர் பி. டி. ராஜன் எம். கே. ரெட்டி முதலிய பிரபல அரசியல் வாதிகளும், சமூக சீர்திருத்தக்காரர்களும், அம்மகாநாட்டில் கலந்துகொண்டனர். இரண்டாவது மாகாண மகாநாடு, 10-5-30ல் ஈரோட்டில் தோழர் எம். ஆர். ஜெயகர் எம். எல். ஏ. தலைமையிலும், 3வது மகாநாடு 10-8-31ல் தோழர் ஆர். கே. ஷண்முகம் எம் எல். ஏ. (இப்போது இந்திய சட்டசபைத்தலைவர்) தலைமையில் விருதுநகரிலும் நடைபெற்றன. மாகாண சுயமரியாதைதொண்டர் முதலாவது மகாநாடு, பட்டுக்கோட்டையிலும், திருவாரூரில் 2வது மகாநாடும் நடைபெற்றன. மகாராஷ்டிரமும், புதுச்சேரியும், மைசூர் சமஸ்தானமும் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களும் சுயமரியாதை இயக்கத்தில் அக்கரை கொண்டு தம்தம் மாகாணங்களில் சுயமரியாதை மகாநாடுகள் நடத்தின. இந்த 3 மாகாண மகாநாடுகள் மட்டுமின்றி பல ஜில்லாக்களிலும் 30ஜில்லா மகாநாடுகளுக்குக்குறையாமல் நடைபெற்றிருக்கின்றன. இவைகளுள் தஞ்சை ஜில்லாவில்தான் அதிக மகாநாடுகள்நடைபெற்றிருக்கின்றன. இப்போது 117சங்கங்கள் தலைச்சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை நோக்குமிடத்து இந்த இயக்கத்திற்கு பொதுஜனங்கள் அளித்துவரும் ஆதரவு எவ்வளவு தூரம் ஓங்கிச்செல்கிறதெனத் தெளிவாகிறது. அங்கத்தினர்களின் மொத்தத்தொகை 10,000க்கு எட்டுகிறது.

சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்து, இதன் போக்குமுறை எவ்வளவு வெற்றியளித்திருக்கிறதென்பதற்கு மேற்கூறிய 3 மாகாண மகாநாடுகளின் நடவடிக்கைகளே போதிய சான்றாகும்.

முதல் மகாநாட்டில் ஒரு வகுப்பாருக்குள்ள தனி உரிமைகளையொழித்தல், எல்லோருக்கும் சம சந்தர்ப்பமளித்தல், பொது விடங்களில் ஜாதி பாகுபாடுகளை தொலைத்தல், பெண்களுக்கு சொத்துரிமையும் கல்வியுமளித்தல், கைம்பெண்களின் மறுமணங்களை ஊக்குதல், இளம்பெண் மணங்களை தடுத்தல், கோவில்களின் பொருட்டும், உற்சவங்களின் பொருட்டும் வீண்செலவு செய்யாது தடுத்தல் முதலியவற்றின் அவசியத்தைக் குறித்து வற்புறுத்தப்பட்டது. முதலாவது மாகாண மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவரான தோழர் எம். கே. ரெட்டியார் தன் வரவேற்புப்பத்திரத்தில், சுயமரியாதை இயக்கம் சீர்திருத்த இயக்கமல்லவென்றும், ஆனால் சமுதாய நிலையை மாற்றியமைக்கும் இயக்கம் என்றும் சுயமரியாதை இயக்கக்கொள்கையைத் தெள்ளத்தெளிய எடுத்துக்கூறியிருக்கிறார். அதுவருமாறு:- "நமது கோரிக்கை ஈடேறுவதற்குச் சீர்திருத்தம் மிகவும் மேன்மையான முறையாகும். தீவிரமான புரட்சிதான் நமக்குப்பயன்படும். மதத்தின் பேரால் சமூகத்தைச் சிதைத்துவரும் தீமைகளையகற்ற ஒரு லெனினாவது, ஒரு முஸோலினியாவது, ஒரு அமானுல்லாவாவது இந்நாட்டில் தோன்றவேண்டும்"

மதத்தால் பயனில்லையென்னும் உண்மையை எடுத்துக்கூறிய டாக்டர் பி. சுப்பராயன் கூறியதாவது:- "நாம் சாதாரண

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு, நாகபட்டணம்.

மகாநாட்டின் துவக்குவிழாவில் திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்களின் பேருரை.

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாட்டின் துவக்க விழாவாற்றிய தோழர் எஸ். நீலாவதி அம்மையின் சொற்பெருக்கு:—

அன்புமிக்க தோழர்களே! தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டின் துவக்குவிழா வாற்றும்படி என்னைக்கேட்டுக்கொண்ட உங்களது அன்பிற்காகஎனது மனமார்ந்த வந்தனத்தை முதலில் உங்கட்கு செலுத்திக்கொள்ளுகிறேன். மகாநாட்டின் திறப்பாளர் என்ற முறையில் என் வாயால் சில சொற்களை இப்போது நீங்கள் அறிந்து கொள்ள விரும்பிவீர்களேயன்றி மற்றபடி மகாநாடு நான் துவக்காததற்குமுன்னரே துவக்கப்பட்டு நீங்கள் யாவரும் கூடியிருக்கின்றீர்களென்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை யென்றே நினைக்கின்றேன்.

சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்.

தோழர்களே! சுயமரியாதை இயக்கத்தின் நோக்கத்தைப்பற்றி விவரிக்குமுன், சுயமரியாதை இயக்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டதென்பதை இரண்டொரு வார்த்தைகளால் மட்டும் கூறிவிடுகின்றேன். சுயநல மேகருவாகி நயவஞ்சகமே உருக்கொண்ட ஒருகூட்டத்தார் மக்களின் பகுத்தறிவை மண்ணுக்கிச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவும், கேட்பதற்கெல்லாம் தலையாட்டும் பெருமாள் /மாடுகள் போலவும் செய்து விட்டார்கள். இன்றும் செய்து வருகின்றார்கள். இதன் பயனாய் நம்நாட்டு மக்கள் தற்போது வெறும் சோற்றுப்பிண்டங்களாய்த்தான்வாழ நேரிட்டிருக்கின்றதென்பதை மிக்க வருத்தத்துடன் சொல்லியே தீரவேண்டியிருக்கின்றது. அறிவிழந்து, ஆற்றலிழந்து, சுதந்திரமிழந்து, பல விதத்தும் பகுத்தறிவைப் பறிகொடுத்து, பார்ப்பானுக்கடிமையாகி அறிஞர் பரிகசிக்கத்தக்க நிலையிலுள்ள நாடு, மக்கள், நமது நாடு, நமது மக்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இருக்க இடமில்லை யென்று தான் கருதுகின்றேன். ஆனால் சிலர் சில மேதாவித் தனம் பேசலாம். அதைப்பற்றி சுயமரியாதை இயக்கத்திற்கு எள்ளளவும் கவலையில்லை யென்பதைத்தான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். எனவே தோழர்களே அடிமையுற்றிருக்கும் நம்மக்கள் அறிவிழந்து தவிக்கும் நமது சமூகம், விழிப்புற்று சுதந்திர வீரர்களாகி சுயமரியாதை அடைந்து நாட்டின் கேடுகள் பல நீக்கி நலம் பெற்று வாழவேண்டுமென்றே சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இனி சுயமரியாதை இயக்க நோக்கத்தை எடுத்துக் கொள்ளுவோம். சுயமரியாதை இயக்க நோக்கத்தைப்பற்றி பலர் பலவாறு பேசுதலும், பலர் பலவாறு திரித்துக் கூறுதலும் பலர் பலவாறு எரிந்து வீழ்தலும் பார்ப்பனரல்லாதார் வேதத்தைக் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்று பார்ப்பன பரம யோக்கியர்கள் எழுதிவைத்திருப்பது போல் சுயமரியாதை இயக்கம் என்ற பெயரை பலகேட்ட மாத்திரத்தில்காதைமுதல்தரமான "சோப்" போட்டுக்கழுவவேண்டுமென சிலர் கழறுவதும், ஒன்று அறியாமையாயிருக்கவேண்டும். அல்லது சுயநலப்பேயின் திமிர் பிடித்த சேஷ்டைகளாயிருக்கவேண்டும். இது தவிர வேறு ஒன்றும் சொல்லுவதற்கில்லை. சுயமரியாதை இயக்க நோக்கத்தை குறுக்கு வழியில் ஆராய்ந்து சுருக்கமாக பதில் கூறவேண்டுமானால், எந்த விதத்தும் எந்த விடயத்திலும், எக்காரணங்கொண்டும் மக்களிடத்து வேற்றுமை காட்டப்படக்கூடாதென்பதும், பேதம் படைத்த நாடாக நமது நாடு எவ்வித முகாந்திரத்தைக் கொண்டும் திகழக்கூடாதென்பதும் ஆகிய நோக்கமே தான். இந்நோக்கத்திற் கெதிரிடையாகவுள்ளவை எவையேயாயினும் அவை யாவும் தூள்தூளாக்கப்படவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. குழந்தைகளை (அறிவீனமாய்) பூனையைக் காட்டி பூச்சாண்டி என்றும் மனிதனைக்காட்டி பயமுறுத்தி அடக்கி பெற்றோர்கள் தங்கள் தொந்தரவைக் குறைத்துக்கொள்ளுவது போல் வைதீகப்பதர்கள் சுயநல சூழ்ச்சிக்காரர்கள், மதம், கடவுள், சாதி, சாஸ்திரம், சடங்கு, புராணம், இவைகளைக் காட்டி, மக்களை அடக்கி ஒடுக்கிதாம் கள்லாபம் அடையும் வழியைத்தேடி காப்பாற்றி கொண்டார்கள். இப்பேர் வழிகள் சுயமரியாதை இயக்க நோக்கத்திற்கு விரோதிகளாயிருப்பதில் நாம் எள்ளளவும் ஆச்சரியப்படக்காரணமில்லை யென்றாலும், ஒருவரை ஒரு நாளைக்கு ஏமாற்றலாம், ஆனால், எல்லோரையும் எக்காலத்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு எதிர்பார்ப்பது முட்டாள் தனம். இதை உணர்ந்து சூழ்ச்சிக்காரர்கள் ஒதுங்குவார்களானால், அதுவே அவர்கள் நாட்டுக்குச் செய்யக் கூடிய மகத்தான தொண்டாகும்.

நிற்க, நம்நாட்டில்ஒவ்வொருமக்கள் மனதிலும், அசைக்க முடியாத ஆணிவேராய்ப் பதிந்து கிடப்பது, மதம், கடவுள் என்னும் இரண்டு வார்த்தைகளேயாகும். அதில் முதலாவது கூறப்பட்ட மூன்றெழுத்துள்ள "மதம்" என்னும் வார்த்தைதான். எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாகும். எனவே பல திறப்பட்ட கொடுமைகள் அடியோடு ஒழிய வேண்டுமானால் அவ்வஸ்திவாரம் தாட்சண்யமின்றி தகர்க்கப்பட வேண்டியது.தான். நியிரென்னும் பொருள்படக்கூடிய மதத்தினாலேயே, நம் நாட்டில்வேற்றுமை விருட்சம் தழைத்தோங்குகின்றது. அறிவிற்சிறந்த ஆராய்ச்சி மிகுந்த தேசமுன்னேற்றத்தில் உண்மையான கவலையுள்ளவர்கள் யாவரும் மதத்தை நஞ்சினும் கொடியதென மதித்து கடிந்தேவந்திருக்கின்றார்கள். மத உணர்ச்சி கொண்ட மக்களுக்கும், அபினை உட்கொண்ட மனிதனுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை யென்பதை நீங்கள் உணருமாறு வேண்டுகிறேன். பல்வேறு சாதிப்பாகுபாடுகளுக்கும், பல்வேறு வகுப்பு வேற்றுமைகளுக்கும், பல்வேறு பிரிவினைகளுக்கும், பல்வேறு கொடுமைகளுக்கும் மதம், மதம், மதம் ஒன்றே காரணம். குப்பை கூட்டுவதில் இடுப்பை கூன் தள்ள விடாமல் நிமிர்ந்து கூட்ட வேண்டுமென்பதைக்கூட மதம் என்னும் ஓர் பொருள் தடை செய்யுமானால் இனி மக்களது வாழ்க்கையை எவ்வளவு தூரம் அது சீர்குலைத்து சின்னபின்னப்படுத்தியிருக்குமென்பதை யான் தெளிவுபடுத்திக்கூறி சொற்பொழிவை வளர்க்காமல் நீங்களே தெரிந்து முடிவுகட்டிக்கொள்ளவிட்டு விடுகின்றேன். எனவே உண்மையாக இந்தியநாடு முன்னேற்றமடையவேண்டுமானால் மதங்கள் அடியோடழிந்தே தீரவேண்டும். இவ்வாறு நாம் அபிப்பிராயப்படுவதுபற்றி பல தோழர்கள் உண்மையறியாது நம் மீது காய்ந்துவிழுகின்றார்கள். அன்னார் யான் கீழே குறிப்பிடும் ஒரு வாக்கியத்தைமட்டும் ஊன்றிநோக்குவார்களாக! "முதலாவதாக இந்தியாவில் நிலைத்திருக்கின்ற இந்துமதம், கிறிஸ்துமதம், முகமதியமதம், பாரசீகமதம், புத்தமதம், சீக்கியமதம், மற்றும்பல மூடநம்பிக்கைக்கொள்கைகளைக்கொண்ட அநேகவிதமான மதங்களே மக்களைப் பல்வேறு வகுப்புகளாகப்பிரித்து வைத்திருக்கின்றன". (இது இந்து மதத்தில் தான் ஊழல்கள் நிறைந்திருக்கின்றன, எங்கள் மதத்தில் அப்படியொன்றும் இல்லையென பெருமை பேசுபவர்களுக்கு தக்கதொரு எடுத்துக்காட்டான வாக்கியமாகும்)

"தற்காலம் இந்தியாவில் இருந்துவரும் மதங்களையும், சாதிகளையும், அடியோடழித்து நிர்மூலமாக்குவதிலேயேதான் ஒவ்வொரு இந்திய தேசிய வீரனும் தன்னுடைய முழு கவனத்தையும் இப்பொழுது செலுத்திக் கொண்டு வர வேண்டும். ஏனெனில் நாலாவிதத்திலும் அவன் முன்னேறுவதை தடைப்படுத்தக் கூடிய முட்டுக் கட்டைகள் இந்த சாதிமதங்களில்தானிருந்து கொண்டு வருகின்றன." இது நான் சொல்வதல்ல. டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதிய "இந்தியாவின் குறைபாடுகள்" என்னும் நூலில் வகுப்புப் போராட்டம், என்னும் தலைப்பின் கீழ் காணப்படுவதாகும். இதை ஊன்றிக் கவனித்து ஒவ்வொரு மக்களும் உண்மை விளக்கம் பெறுவார்களாக!

கொள்ளையடிக்க இடமில்லை, எதிர்ப்பு.

எனவே தோழர்களே! மத உணர்ச்சி குன்றி மதமானது ஆட்டங்கொடுக்க ஆரம்பித்து விட்டால் மதப்பாதுகாப்பாளர்களுக்கு எவ்விதத்தும் கொள்ளையடிக்க இடமில்லை ஏகபோக உரிமை அனுபவிக்க வழியில்லை. ஒருவனை ஒருவன் ஆழ்த்தி சோம்பேறி வாழ்க்கை வாழ இடமில்லை. எனவே இதன் பயனாய், என்ன எதிர்ப்பு! எவ்வளவு எதிர்ப்பு!!

உதாரணமாக மதச்சிறுத்தும், கடவுள் பைத்தியமும், குருட்டு நம்பிக்கையும் கொண்ட மக்களால், சங்கராச்சாரி எனப்படும் சோம்பேறிகள் கூட்டத்தலைவர் எவ்வளவு பொருள் விழித்திருக்கையிலேயே பகற்கொள்ளையடிக்கின்றார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். மக்கள் உள்ளத்தில் உண்மை உணர்ச்சி எழும்பி பகுத்தறிவு - ஒளி வீசத் தொடங்கி விட்டால் உலகமே என் கையின் கீழ் என்று ஏகச்சக்ராதிபதி ஸ்தானம் வகித்திருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் இந்த சங்கராச்சாரியின் கதி என்னாகுமென்பதையான் இப்போது எடுத்துக்காட்ட வேண்டுமா எனக்கேட்கின்றேன். கொள்ளையடிப்பதையே தம் தொழிலாகக் கொண்ட கூட்டத்தார் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு மதம்பிடித்த யானை போல் வெருண்டோடுவார்கள் என்பதில் ஐயமேயில்லை. சுயமரியாதை இயக்கத்தின் மூலம் எவரும் எவ்விதக் கொள்ளையும் நிகழ்த்த இயலாது. பாடுபட்ட மக்கள், தம் இரத்தத்தை சாறாய்ப் பிழிந்த மக்கள் வன்னெஞ்சர்களின் வலையிற் சிக்கி, கொள்ளை கொடுத்து குடிக்க கூழிற்கும், இருக்க இடத்திற்கும், உடுக்க உடைக்கும், ஆலாய்ப் பறந்து, மனித உரிமைகளை அடைய லாயக்கில்லையென மறுத்து ஒரு புறம்

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.)

தஞ்சை ஜில்லா 3-வது

சுயமரியாதை மகாநாடு, நாகபட்டணம்.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் எ. சிவராமசாமி பிரசங்கம்.

தோழர்களே!

நமது இயக்கத்தலைவரும் மற்றோர்களும், பற்பல ஊர்களிலிருந்து இப்போது வந்திருக்கிறார்கள். இன்று இங்கே மகாநாடு நடத்துவதாக கூடியிருக்கிறோம். இம்மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தார்களுடைய சார்பாகவும் உன்னுடைய சார்பாகவும் உங்கள் யாவரையும் நன்றியறிதலுடன் வந்தனத்தோடு வரவேற்கிறேன். உங்கள் வரவு நல்வரவாகுக!

சகோதரி சகோதரர்களே! இந்நில உலகில் தோன்றி மறையும் சேதன சேதனங்களில் மனித வர்க்கமாகிய நாமும் ஒன்றாகும். சகல ஜீவகோடி ராசிகளுக்கும் புலன் பொறி அறிவு, சிற்சில அளவோடு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மானிட வகுப்பாகிய நமக்கோ பகுத்தறிவு என்னும் ஒன்று மிகுதியாக பெரும்பாலும் காணப்படுகிறது. எந்த தேசத்தாராகினும், எந்த பாஷை பேசுகிறவர்களாகினும், எந்த நிறமுள்ளவர்களாகிலும், எந்த நடை உடை பாவனைக் காரர்களாகினும், எந்த சீதோஷ்ண நிலைமைக்கு உட்பட்டவர்களாகிலும், மனித வர்க்கமாகிய நமக்கு, சுகதுக்கம், சந்தோஷம், வருத்தம், முயற்சி தளர்ச்சி பொதுவாக உண்டு. ஒரு சமயம் இல்லாவிட்டாலும் மற்றோர் சமயத்தில் ஒருவருக்குண்டாகும் உணர்ச்சியை மற்றொருவருக்குத் தெரிவித்துக்கொள்ளுவது சாதாரணம். அப்படித் தெரிவித்துக்கொள்ளும் சமயத்தில், பல திறப்பட்ட மன பரிபக்குவம் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் சந்திக்கும்படி ஏற்படுகிறது.

இந்நிலைமை ஏற்பட்டதற்கு அநேக காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லப் போதுமான காலம் இல்லை. அநேக காரணங்கள் உங்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தபோதிலும் கொஞ்சமாகிலும் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. எல்லாக் காரணங்களுள்ளும் முக்கியமானது அதிருப்தி அல்லது மனக்குறைவு. "வாயார உண்போர் வாழ்த்துவதும், நொந்தபேர் வைவதும் எங்குளக." என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அவ்வித குறைவு ஏற்படுவதைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இந்தியா "புண்ணிய" பூமி.

காலால் நடந்து போகக்கூடிய பாதை, ரயில், கப்பல், ஏரோப்ளேன், தந்தி முதலியன வசதிகள் மனிதனுடைய பகுத்தறிவால் ஏற்பட்டவை. இவ்வசதிகளின் உதவியால் நமக்கு அப்புறமுள்ள அநேக தேசங்களின் உயர்வு, தாழ்வு, பெருமை சிறுமை முதலானவைகளைப்பற்றி நாளுக்கு நாள் தெரிந்து வருகிறோம். அப்படியிருந்தபோதிலும் இந்தியாவிற்கு பிரத்தியேகமாய் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் தனிச் சிறப்பு என்ன? அத்தனிச் சிறப்பைப்பற்றிப் போற்றக்கூடிய மனப்பான்மை உள்ளவர்களுக்கு அவர்களுக்கு ஆதாரமான சாஸ்திரங்களும், அவர்கள் மேற்கொண்ட பழக்க வழக்க நம்பிக்கைகளும் ஏதேஷ்டமாய் உண்டு. மேற்படி சாதனங்களைத் துணையாகக்கொண்டு ஒரு வகுப்பார் தங்களுடைய சுகபோகம் தனபாக்கியம் முதலானவைகளை நாளுக்கு நாள் படிப்படியாக விருத்தி செய்து வந்து கொண்டே இருக்கிறார்கள். அப்படி பலனடைந்து வருகிறவர்கள் தாங்கள் வாழும் நாட்டைப் புண்ணிய பூமியென்று புகழத்தான் செய்வார்கள். அப்புகழுக்கு வேண்டிய ஆதாரங்களை வலுப்படுத்தத்தான் முயற்சி செய்வார்கள். முயற்சி செய்து வருகிறார்கள். அவ்வித முயற்சிகளால் நாடுவதில் கோவில், குளம், மடம் முதலான இடங்களையும் வர்ணாச்சிரமம், மறுஜென்மம், கருமம், தலைவிதி, தீண்டாமை, அண்டாமை, பார்க்காமை, நெருங்காமை முதலான கொள்கைகளையும் துணையாகக்கொள்ளப்பட்டன. பொதுநலன் புறக்கணிக்கப்பட்டு சுயநலம் கவனிக்கப்பட்டது. சுயநலம் கருதப்படவே ஒரு குலத்திற்கொரு நீதி ஏற்பட்டது.

ஒரு குலத்திற்கொரு நீதி ஏற்படவே முதலாளி, தொழிலாளி, ஆண்டை, அடிமை, பணக்காரர், ஏழை, உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி முதலான பிரிவுகள் ஏற்பட்டன. சுமார் 7 கோடி மக்கள் வாயில்லாப்பூச்சுப் புழுக்களைவிட கேவலமாய் தீண்டப்படாதவர்களாய்க் கருதப்படுகிறார்கள். ஊருக்கு வெளியே வசிக்கவும் ஊற்றின் தண்ணீரைக் குடிக்கவும், இட்டவேலையைச் செய்யவும், கொடுத்த கூலியைப் பெற்றுக்கொள்ளவும் நடக்க பாதையும், குடிக்க, குளிக்கத் தண்ணீரும், வசிக்க இடமும் அகப்பட்டால் என்றென்றைக்கும் தலையெடுக்க முடியாதபடி. தீண்டப்படாதவர்கள் என்போர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஐயோ அவர்கள் நிலைமை எக்காலத்தில் மாறுமோ!

எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா? தெரியவே தெரியாது. அதுபோல பலவித குறைவுகளால் கஷ்டப்படுகிறவர்களின் நிலைமை, சுகபோகம் அனுபவிப்பவர்களுக்குத் தெரிவதில்லை. போகத்தை விரும்பிக் கஷ்டப்படுகிறவனுடைய நிலைமை புரோகிதனுக்குத் தெரிவதில்லை. விதியை நினைத்துக் கஷ்டப்படுகிறவனுடைய நிலைமை மதியால் வெல்கிறவனுக்கு தெரிவதில்லை. அதைப்போல கஷ்டத்தை அறிந்துகொள்ள அல்லல்பட்டோர் ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும்படை என்ற கஷ்டங்களின் கொடுமையால்கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும்படை என்ற கஷ்டங்களின் கொடுமையால் கண்ணீர் விட்டலறும்படிகாலம் ஏற்பட்டது. வெறுங்கண்ணீரால் என்ன செய்ய முடியும்? "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற வாக்கியப்படி ஊக்க உணர்வோடு உழைக்கவேண்டிய நிலைமைக்கு வந்தோம். அந்நிலைமைக்கு வரும்போது பழையனகழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றபடி நாகரீக உலகத்தின் தத்துவத்தை அப்படியே மாறுதல் செய்யவேண்டியதாகிறது. மாறுதல் விருத்திக்கு அடையாளம் மாறுதல் ஏற்படும்போது பழைய பழக்க வழக்கங்களை கொண்டவர்களுக்கு மனத்தாங்கள் உண்டாகிறது. ஆகவே பொதுநலவாதிகளுக்கும் சுயநலவாதிகளுக்கும் போட்டி ஏற்படுகிறது. அவ்வித எதிர்ப்பே, போட்டியே நமது சுயமரியாதை இயக்கத்திற்கு ஏற்பட்டது. அந்த எதிர்ப்பிற்கு எவ்வித நொண்டிச் சமாதானம் சொல்வதானாலும் நம்மியக்கம் இனிமேல் சும்மாயிருக்கப்போவதில்லை.

நம்மியக்கம் பகுத்தறிவென்னும் ஆயுதத்தை ஆதாரவாகக் கொண்டிருக்கிறது. அறிவின் ஆராய்ச்சிக்கு எந்த நொண்டிச் சமாதானமும் எதிர் நிற்காது. பற்பல தேச சரித்திரங்களை வாசித்துப் பார்க்கும்போது அறிவாளிகளுக்கு கஷ்டங்களை உண்டாயிருக்கின்றனவென்று உணர்கிறோம். கஷ்டங்கள் உண்டான போதிலும் அறிவாளிகள் தளர்வடைவதில்லை; முடிவில் சிறப்புண்டாகிறது. கருமமே கண்ணாயினர், எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்துவதில்லை. ஆகவே சுயநலத்தை மாற்றிப் பொதுநலத்தைப் பிரதானமாகக் கொண்டு அதற்கு வேண்டிய வழிகளை நாடித்தேடித்தேடி உழைக்க ஒன்றுபட்டுக் கூடியிருக்கிறோம். நம் இயக்கப் பெரியாரும் மற்ற தோழர்களும் ஒருவிதத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி நடக்க இப்பொழுது கலந்தாலோசிக்கவேண்டும். இந்தியாவின் எப்பக்கத்திலும் ஆலயப் பிரவேசம், தீண்டாமை விலக்கு என்பதைப்பற்றிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்து ஒருவித முடிவுக்கு வரவேண்டும். இந்தியாவின் அரசியல் அமைப்பைப்பற்றி ஆங்கிலேய அரசாங்கத்தார்களால் வெளியிடப்பட்ட "வெள்ளைக்காகிதம்" என்பதைப்பற்றியும் யோசிக்கவேண்டும். இன்னும் அநேக முக்கியமான விஷயங்களைப்பற்றி விஷயாலோசனைக் கூட்டத்தில் கவனிக்கப்பட்டு தீர்மானங்கள் ஏற்படும். சமீப காலத்தில் காலஞ்சென்ற தோழர்கள் சிவகங்கை ராமச்சந்திரன், திவான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார், திவான்பகதூர் பி. கேசவ பிள்ளை இவர்கள் இறந்ததைக் குறித்து நாம் வருத்தத்தைத்தெரிவித்துக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. நம் இயக்கத்தில் ஈடுபட்ட தோழர் ஆர். கே. ஷண்முகம் இந்தியா சட்டசபைக்கு யாதொரு எதிர்ப்புமில்லாமல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவரைப் போற்றிப் புகழ்ந்து நமக்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

பணமும் லேவாதேவியும்

எப்படி வந்தது
எப்படி இருக்கிறது ?
எப்படி இருக்கவேண்டும்

(தோழர் வைசு)

மக்கள் தனிநிலையாக வாழ்வு நடத்திய முற்காலத்தில் உலகில் பணம் என்ற ஒரு பொருள் இல்லை. பிற்காலத்தில் நாணயமாக்கப்பெற்று, இன்று நிலவும் நாணயங்களான செம்பு, நயம் வெள்ளி (நோட்டு என்னும்) கடுதாசி ஆகிய பொருள்களை மக்கள் உணவாக உண்ணமுடியாது. உண்டாலும் ஜீரணிக்காது; தீமையே விளையும். இவைகளை உடுக்கவும் முடியாதன்றோ? உண்ண உணவும், உடுத்த உடையும் தான் மக்களுக்கு இன்றியமையாத தேவை. இவை இரு காரியங்கட்கும் உபயோகப்படாத ரொக்கச் சிலாவணியாகிய பொருளையே நாம் பணம் என்று சொல்கிறோம். அக்காலத்தில் மனித வாழ்வுக்குத் தேவையில்லாதிருந்த இப்பொருள் பிற்காலத்திலேயே உண்டாக்கப்பெற்றது.

இது இயற்கைப் பொருள் அன்று. ஆகவே இப்பணம் எனும் செயற்கைப்பொருளை இடைக்காலத்தில் மக்கள் உண்டாக்கியதன் காரணமாக, பல நூறு வருடங்கட்குப் பிறகு, இக்காலத்தின் மக்கள் தண்டனைக்காளாகி அல்லற்படுகின்றனர். இன்று மனித சமூகத்தைப் பீடித்து வாட்டும் இந்த பணத் தொல்லை மற்ற ஜீவராசிகட்கில்லையன்றோ? அவைகள் என்றும் ஒரே மாதிரியாக வாழ்கின்றன. அறிவில் பெரியது என்று பேசிக்கொள்ளும் மனிதச் சமூகம் துன்பத்தைப் பெருக்கிச் சீரழிவது கண்கூடு.

உணவுக்கும் உடைக்கும் தேவையான மூலப் பொருள்களை அக்காலத்திய மக்கள் உழுது பயிரிட்டுப் பெற்று பண்படுத்திக்கொண்டனர். அக்காலத்திய வியாபாரங்கள் எல்லாம் பண்டம் மாற்றும் முறையில் நடைபெற்றன அக்காலத்து மக்கள் சோம்பல் என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். இன்றிருக்கிற மாதிரி தம் மூதாதைகள் தேடிய பணத்தை பேங்குகளில் போட்டு வைத்துக்கொண்டு மக்கள் தொழில் இன்றி சோம்பேறிகளாக (உண்டியல்கள்) செக்கு கிழித்துவிட்டு டம்பமான வாழ்வு நடத்த அக்காலத்தில் இடமில்லை. ஒவ்வொரு குடும்பமும் ஓர் தொழிலை மேற்கொண்டு தம் குடும்பத் தேவைக்கதிகமான பொருள்களை உற்பத்திசெய்து அதிகமான எஞ்சிய பொருளைக்கொடுத்து தங்கள் தேவைக்கான ஏனையோர் உற்பத்தி செய்யும் பண்டங்களைப் பெற வேண்டியதாக இருந்தது.

உதாரணமாக மண் பாண்டங்கள் செய்யும் தொழிலாளி ஒருவர் (வேறு பல வேளாண்மை நெசவு ஆகிய) வாழ்வுக்கு வேண்டிய பல பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியாதன்றோ? ஆகவே அவர் மண் பாண்டங்களையே செய்து-பண்டம் மாற்று முறையில் வேண்டிய பொருளை மண்பாண்டங்களைக் கொடுத்தே பெறவேண்டியதாக இருந்தது.

அக்காலத்தில் உண்ண உணவும், உடுத்த உடையும், பெறமுடியாத ஏகதேசங்களில் மற்றவருடைய உதவி தேடியிருக்கலாமே தவிர பெறுங்கடன் பெற்று மானங்கெட அப்பொழுது வழியில்லை. பண்டமாற்று கிற முறை ஒழிந்து, பண்டங்களின் மதிப்பைப் பணத்தாற் கொண்டு வந்த அன்று முதல் மக்களிடையில் சோம்பேறித்தனமும், பேராசையும் சேமித்து வைக்கும் குணமும் வளர்ந்து வந்தது.

இதன் காரணமாகவே தற்காலத்தில் மக்கள் வாழ்வுக்குத் தேவையான உணவு, உடை ஆகிய பொருள்கள் மலிவாகக் கிடைத்தும் அவைகளை மக்கள் பெற முடியாமல், பணப் பஞ்சம் உலகமெங்கும் ஏற்பட்டு உலக நிலை தடுமாற்றமடைந்திருக்கிறது.

அக்காலத்தில் மக்கள் பேராசை கொள்ள இடமில்லை. பணத்தை பாங்கில் டிபாசிட் செய்யவோ, அதற்குரிய பெரும் பொருள் திரட்டவோ அக்காலத்தில் இடமில்லை. பண்டங்களை வருடக்கணக்காக சேமித்து வைத்தால் அவைகளிற்பல கெட்டு விடும், கெடாத பண்டங்களை சேமிக்கலாம் என்றால் அதற்குரிய வசதியும் அக்காலத்தில் இல்லை. கூலிக்கு வேலை செய்யும் அடிமைகள் அப்பொழுது கிடையாது. ஆனபடியால் அக்காலத்து மக்கள் எல்லோரும் சுறுசுறுப்பாகத் தமக்கு வேண்டிய தேவைக்குத் தக்க தொழில்களைத்தாங்களே செய்து நல்ல நீண்டவாழ்வு நடத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

லேவாதேவி

இடைக்கால மக்கள் இப்பணம் எனும் பொருள் உண்டாக்கப்பட்டதிலிருந்து பண்டத்துக்கு விலையாக பணத்தைக் கொடுத்து பண்டங்கள் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டபிறகு பண்டமாற்றின்றி, பணத்தை மட்டும் தேவைப்படுவோருக்குக் கடன் கொடுத்து வாங்கிக்கொள்ளவும், வியாபாரத்தையும் தொழிலையும் வளர்க்கவும் லேவாதேவித் தொழிலை அன்று மக்கள் ஆரம்பித்தனர். இந்த லேவாதேவித் தொழில் இடைக்காலத்தில் பலவகைகளில் நல்ல பலனை மக்கட்குக் காட்டியதுமட்டுமின்றி மக்களை பணப் பித்தர்களாகவும் மாற்றிவிட்டது. பணம் படைத்தோரையும், அஃதில்லாதோரையும் மக்கள் சந்திக்கும்போது முன்னவரைப் பார்ப்பதில் கண்ணை விசாலித்தும், பின்னவரைப் பார்ப்பதில் கண்ணை சிறுத்தும் பார்ப்பதிலிருந்து மக்கள் திறமையை நோக்காது பணப் பித்தம் தலைக்கேறி நிலைதடுமாறுவதைக் கண்கூடாகக் காண்கிறோமன்றோ?

இப்பணம் உணவு, உடை ஆகிய எல்லாம் தரவல்ல கண்கண்ட தெய்வம் எனக் கருதி மக்கள் அதைச் சேமித்துவைக்கவும் வசதி கண்டபிறகு பேராசை என்ற பேய் ஒன்று சிருஷ்டிக்கப்பெற்று அதுவும் வளர்ந்துவரத் தலைப்பட்டது.

ஆனால் லேவாதேவித் தொழிலை அப்பொழுது ஆரம்பித்த மக்கள் இதனைத்திறம்பட நடத்துவதற்கு; வாக்குறுதி, நாணயம் திறமை ஆகிய முறைகளைக் கைப்பிடித்து மிக நேரிய முறையில் வியாபார அபிவிருத்தி, தொழில் அபிவிர்த்திகட்கு தேவையான உதவிபுரிந்து தாங்களும் ஊதியம் பெற்றனர். பணம் சேகரிக்கும் லேவாதேவி ஆகிய தொழில்களுக்கும், வியாபாரத்துக்கும் போதிய மூலதனம் இல்லாத்திறமைசாலிகள் கடன் வாங்கத் தலைப்பட்டனர். அக்காலத்தில் திறமைசாலிகட்கும், வாக்குறுதியுள்ளோர்க்குமே கடன் கொடுப்போர் உதவி செய்தனர். திறமைசாலிகள் பெற்றகடனில் பணந்திரும்பிவராத சில சந்தர்ப்பம் நேர, ஈடுகொடுத்து கடன்பெறும் துறை உண்டாகியது. இதன் பிறகு திறமையற்றோரும் ஈடு கொடுத்துக் கடன் கேட்பதற்கு பேராசைக் காரணமாகச் சில லேவாதேவிக்காரர் கடன் கொடுத்தோடு இளைஞர்கள் விபசாரச் செலவுக்கும் பணவுதவி செய்தனர். இதன்பிறகு பேராசையால் உந்தப்பெற்ற மக்கள் மல்கினர். நாணயத்தையும், வாக்குறுதியையும் விட்டு தந்நலம் பெருகியதனால் தாங்களும் கெட்டு, ஏனையோரையும் கெடுக்கும் கேவல நிலைக்குப்பலர் இறங்கி விட்டனர். இதனால் லேவாதேவித் தொழிலை மக்கள் வெறுக்கும் சீர்கெட்ட நம்பிக்கையற்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

இயற்கையில் உற்பத்தியாகிற மக்கள் வசதிக்கு வேண்டிய பொருள்களை மிக விரிவாக உற்பத்தி செய்யப்பெற்று அவை இன்று மலிந்திருந்தும் செயற்கைப் பொருளாக மக்கள் உண்டாக்கிய இந்தப் பணம் உண்டாக்கப்பெற்றதன் காரணமாக இப்பொழுது பணநெருக்கடி என்ற துன்பம் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்களையும், பல அரசாங்கங்களையும் நிலைகுலையச்செய்திருக்கும் உண்மை பிரசித்தமாகத் தெரிகிறது.

மனித வகுப்புக்கு நோயாக எப்படியோ வந்து புகுந்து அமுல்செலுத்துகிற இந்தப்பணம் என்ற பொருளை இனி ஒழிக்கவிட முடியாது. பணத்தின் மதிப்பை விட்டுவிடாதபடி இன்றுஉலகநிலைபின்னப்பட்டுக் கிடப்பதால், இனி எப்படி இப்பணத்தை நிர்வகிப்பது என்பதைத்தான்இக்காலத்து மக்களாகிய நாம் சிந்தித்து முடிவு கட்டவேண்டும்

கடன் வாங்குபவர்,—எதற்காக வாங்குகிறார்? இளைஞரா? அனுபவமுள்ளவரா? திறமைசாலியா? என்ற விசாரணைகள் செய்வதில், கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரன் கவலை செலுத்தாது, பணத்தைத் திரும்ப வாங்க வழியுண்டாவென்பதைமட்டும் கவனித்து கடன் வாங்கியவருடைய வீடு வாசலையாவது பிடுங்கிப் பணமாக்கலாம் என்ற கேவல நிலைக்கு வரலேவாதேவி செய்வோர் முற்பட்டிருப்பது வருந்தற்குரியது.

இந்நிலையில் கடன் வாங்குபவர்கள் மூடத்தனமான தேவைகட்கும் கடன் பெறும் முறையில் கடன்வாங்குவதென்பது சர்வசாதாரணமாகி மக்களில் பெரும் பகுதியினர் கடனுக்கு ஆளாகத் தயங்காத நிலை ஏற்பட்டது.

கடன்.

கடன் எத்தகைய துன்பத்தை விளைவிக்கும் என்பதைக் கம்பர்;

"கடன் பட்டார்நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கைவேந்தன்" என்றபாடலில் விளக்குகிறார் நெஞ்சில் அம்பு பட்டு இறக்கும் தருவாயில் இருந்தவனுடைய துன்பத்துக்கு கடன்துன்பத்தை உவமையாகக்காட்டுகிறார். மரணத்துன்பத்தை விட கொடிய துன்பம் வேறு இருப்பதாகப் பெரும்பாலான மக்கள் நினைக்கவில்லை என்ற கருத்தில் அவர் இந்த உவமை கூறியிருக்கலாம். (இலக்கணத்தை விட்டு நீதியை மட்டும் நோக்குக) மரணதுன்பத்தைவிட கடன் துன்பம் பலமடங்கு பெரிதென நான் கூறுவேன்.

தன்மதிப்பும், கண்ணியமும் உள்ளவன், தான் வாங்கிய கடனைத்திரும்பக்கொடுக்க வழியற்ற நிலை எதிர்பாராது ஏற்பட்டால் அவன்மனம் படும் சகிக்கொணாக்கொடிய வேதனையை விரித்துச் சொல்லவும் முடியுமோ? மரணமவனை ஓர்முறை போய் கொன்று விடும். கடன் அவனை உயிர் உள்ள அளவும் சித்திரவதை செய்யும் தரத்து.

மனித சமூகத்துக்குக் கேடு தரும் துறையில் தனிமனிதர் பொருப்பில் நடத்திய தொழில் முறையில் இன்று சேர்ந்திருக்கும் பொருளாதார நெருக்கடியினால் துன்பப்படுவோர் தொகை மிகமிக அதிகமான பதைக்கும் மயக்க நோயல்லவன்றோ? இதன் காரணமாக இப்பொழுது இத்துன்பத்திற்காளானோர் இதன் கொடுமை சகிக்க முடியாது, மா

தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.

அன்பே சிவம் என்பது ஆஸ்திகர் கரடி.

(பாரதிதாஸன்.)

சிவம் என்று சொல்லிச் சொல்லி வயிறு வளர்த்த பழக்காலச் சோம்பேறிப் பசங்கள் சிவமென்ற பதத்திற்கு வேண்டியவரை கௌரவத்தை உண்டுபண்ணி விட்டார்கள். சிவமென்பது ஆக்கவல்லது, அழிக்கவல்லது, காக்கவல்லது ஆகையால் அதற்குத் தாசராகிய எங்கள் காலில் அனைவரும் விழுங்கள்; நீங்கள் பாடுபட்டதைக் கொண்டுவந்து எங்களிடம் கொட்டுங்கள்; நாங்கள் விலாப்புடைக்கத் தின்றுகொழுக்கிறோம்; நரகத்திற்கும் மோக்ஷத்திற்கும் தலைமை வகிப்பது இதே சிவந்தான்; ஆகையால் நரகத்திற்குப் போகாதிருக்கச் சிவத்தின் கூட்டத்திற்கு அடிமையாகி வாழுங்கள் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி நாளடைவில் நிலங்களையும், காசையும் சோம்பேறிகள் கைப்பற்றினார்கள். இதனால்தான் ஆரம்ப காலத்தில் பொதுவாகஇருந்த உடைமையாவும் ஒரு சாராரிடம் அடையலாயிற்று; இதனால்தான் நாளடைவில் பெரும்பான்மை மக்கள் ஏழைகளாகித் தவிக்கலானார்கள்.

ஆயினும், இந்த முதலாளிகள் காலக்கிரமத்தில் பெரும்பான்மைத் தொழிலாளரான ஏழைகட்கு அஞ்சத் தலைப்பட்டார்கள். ஏன்? கூட்டமாகக் கூடிவந்து தமது பசிக்கொடுமை நீக்குவதற்காக முதலாளிகளை உதைத்துப் பணத்தைப் பிடுங்கிக் கொள்ளவும் கூடுமல்லவா? இதற்காக முதலாளிகளாகிய ஆஸ்திகர்கள் பண்டாரங்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

தங்களில் கொழுத்த ஆட்களைப் பிடித்து அரசன் என்றும் படைவீரர் என்றும் ஒரு கூட்டத்தை உண்டாக்கி அந்தக் கூட்டத்திற்கு ஆயுதமும் கொடுத்து அரசாட்சி என்பதன் பேரால் ஏழைமக்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொண்டார்கள்.

இதன் பிறகாவது முதலாளி வர்க்கத்திற்கு மன அமைதி ஏற்பட்டதா? இல்லை. ஏன்? தாம் ஏற்படுத்திய அரசர்கள் ஆளவேண்டும், நாடு பிடிக்கவேண்டும் என்ற பைத்தியத்தால் வெறி நாய்கள்போல் சதா சண்டையிடலானார்கள். இச் சண்டைகளால் தொழிலாளர்கட்குக் கொஞ்சம் கிராக்கி ஏற்பட்டது. சிறிது மதிப்பு ஏற்பட்டது. ஏன்? படைக்கு ஆள் வேண்டும். தொழிலுக்கு ஆள் வேண்டும். ஆகையால் இந்த அரசர்களால் தமது ஆஸ்திக சொத்துகள் முழுதும் காக்கப்படுமா என்று பணக்காரராகிய சோம்பேறிகளாகிய தம்பிரான்கள் பயந்தார்கள். இதனால் அவர்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள் என்றால் பெரும்பான்மையான ஏழைத்தொழிலாளர்களை நாம் தேகபலத்தால் முழுதும் அடக்கிவிட நினைப்பது முடியாத காரியம் ஆதலால் இவர்களின் மூளையில் முட்டாள் தனத்தையும், கண்ணில் மிளகாய்த் தூளையும் தூர்த்துவிட்டால் சாவகாசமாக நாம் ஏழைமக்களின் உழைப்பால் வயிறு வளர்க்கலாம் என்று முடிவு கட்டினார்கள்.

பூர்வ ஜென்மத்தில் செய்த கர்மத்தின் பலன் தான் நீங்கள் ஏழைகளாக இருப்பது என்றும், அந்த ஏழ்மையை நீங்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டுமென்றும், பொதுமக்கள்பால் கரடிவிட ஆரம்பித்தார்கள். இந்த ஜன்மத்தில் ஏழையாக இருந்தாலும் பாதகமில்லை மிச்ச மீதியைக் கொண்டு பூணூல் திருடர், சடைமுடித்திருடர், கோயில் திருடர், அரசாங்கத் திருடர்கட்குப் பூசை போட்டுவந்தால் அடுத்த ஜன்மத்தில் குஜுகுஜுவென்று வாழலாம் என்பன போன்ற கயிறுகளைத் திரிக்க ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தில் தான் பிரமா நிஜமென்று பூலோகத்தில் குதித்து நான்கு வருணத்தையும் பிரசவ வேதனையின்றி முகம், புயம், இடை, கால் ஆகிய இடத்தினின்று வெளிப்படுத்தித் தொழிலாளர்கள் கஞ்சிக்குக் கேடாக உழைக்கும் நிலையிலேயே இருக்கவேண்டும். சோம்பேறிகள் ஏமாற்றித்தின்னும் நிலையிலேயே இருக்க வேண்டும் என்ற பேதத்தைச் சாஸ்வதப் படுத்தினார். இப்படிப்பட்ட பிரசாரம் எவ்வளவு தூரம் வலிவடைந்து மக்களின் மூளையைக் கலக்கிவிட்டது எனில் ஏழுமலையான் பேர்சொன்னால் குடியானவன் பெண்டாட்டி தாலியறுக்கவும் முடிகிறது. திருப்பதியில் காணிக்கை போட்டபின் அதற்குப் பதிலாகப் பார்ப்பான் செருப்பாலடிக்கையிலும் கோவிந்தா என்று தலையைக் குனிந்து காட்டும் நிலையும் ஏற்பட்டது. உலக மக்களில் 100க்கு 90பேர் ஏழைகளாகவும் மீதிப்பேர் உலக உடைமைக்கு அதிகாரிகளாகவும் காலகதியில் ஆஸ்திகமும் அரசாங்கமும் செய்துகொண்டே வந்துவிட்டது. ஆயினும் ஏழைமக்களைக் கொள்ளையிடும் இந்தக் கூட்டத்தினர்க்குள்ளே நாளடைவில் சிறிது மனத்தாங்கல் உண்டாவதுசகஜமாகும்.

ஏனெனில் ஆட்சி செலுத்துவோரிடம் படைப்பலம் இருப்பதால் கரடி விடுங் கூட்[illegible]ப்படுகிறது; குருக்கள், மடாதிபதிகள் ஆகியவர்களின் மதிப்புக் குறைய ஆரம்பித்தது. இதனால் தாமே ஆட்சி செலுத்தவேண்டும் என்ற ஆசையும் பிறந்தது. எனவே தமது ஆஸ்திகச் சொக்குப் பொடியைப் படைப்பலம் கொண்ட ஆள்வோர் மீதும் தூவிவிடவும் கச்சை கட்டினார்கள். கடவுட் பிரசாரம், மதப்பிரசாரம், பெரியார் வழிபாடு, ஆத்மசக்தி முதலிய வலைகளை ஓயாது வீசினார்கள். நாளடைவில் உலக மக்கள் ஒருவர் தவறாமல் அந்தக் கிணற்றில் விழுந்தார்கள். போப்புக் கூட்டமும், சங்கராச்சாரி கூட்டமும், மடாதிபதி கூட்டமும் இன்று உலகைக் குரங்கு போல் ஆட்டி வைக்கிறார்களா இல்லையா? உழைப்பென்பது கொஞ்சமும் இல்லாமலே கோடானுகோடிப் பணத்திற்கு அதிகாரிகளாகவும், படைப்பல மிகுந்த ஆள்வோரையும் அடக்கிப் பிடிப்பவர்களாகவும் விளங்குகிறார்களா இல்லையா?

இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், ஏமாற்றுங்கூட்டமும், ஏமாறுங் கூட்டமும் உலக ஆரம்ப முதலே இருந்து வந்தன. ஏமாற்றுங் கூட்டத்தார் கருவியாக ஏற்படுத்திய கடவுள் கொள்கை மதக்கொள்கைகளும் புராதீனமானவைகளே ஆயினும் ஏமாறுவோரிடம் சலுகை காட்டும் கட்சிகள் அப்போது தோன்றவுமில்லை. அக் கட்சிகளில் "பிறரிடம் அன்பு பாராட்டல்" என்னும் கொள்கையானது ஏமாற்றுங் காரருக்குச் சண்டமாருதம் என்று தோன்றியிருக்கலாம். ஏனெனில் அந்த வார்த்தை ஏழைமக்களையெல்லாம் ஒன்றுபடுத்திவிடுமென்று அவர்கட்குத் தெரியும். அதனால் அன்புப் பிரசாரத்தை எதிர்க்காமல் அதைத் தாமே மேற்போட்டுக் கொண்டார்கள்.

அன்புநெறியை ஓங்க விட்டார்களா? அதை வேரோடு கல்லிப்போட்டார்கள். எப்படி? கொள்ளைக் கூட்டத்திற்கு, முதலாளி வர்க்கத்திற்கு, ஆகவே தந்தவரும் கடவுள் அன்பின் உருவமாயிருக்கிறார் என்று சொல்லிவிட்டார்கள்; அன்பேசிவம் என்று சொல்லிவிட்டார்கள். அது முதற்கொண்டுதான் இந்தப் பாழான உலகத்தில் அன்பு என்பது ஏழைமக்கள் முதலாளிகளிடமும், கடவுளிடமும் காட்டுவதுதான் என்று முடிந்தது. பணக்காரன், புரோகிதன், அரசாங்கம் ஆகிய இந்தக் கூட்டம் எப்போதாவது ஏழை மக்கள்பால் அந்த அன்பைச் செலுத்தியதாக எங்காவது யாராவது காண்பிக்க முடியுமா? ஆஸ்திகர் விட்ட கரடிகளில் அன்பேசிவம் என்பது அசல் கரடியாகும்.

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் வாரந்திரக் கூட்டம் 24-3-33ந் தேதி மாலை 6 மணிக்கு கோவை சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் காரியதரிசி தோழர் ஆர். ஜெகன் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. அது சமயம் தோழர்கள் எ. சித்தையா, எ. பாபுசாமி, பெரிய அக்கிராரம் அஜீஸ் ஆகியவர்கள் மாரியம்மன் "பண்டிகையும், பகுத்தறிவும்" என்பதுபற்றி மிகத் தெளிவாகப் பேசினார்கள். அதைத் தழுவி தோழர் ஈ. வி. ராமசாமி அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் மக்கள் மனதில் பதியுமாறு பேசினார்.

கூட்டத்திற்கு சுமார் 300 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசி எச். பாஷா அவர்கள் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

கான் சாஹிப் கே. ஏ. ஷேக்தாவூது சாகிபுக்கு விருந்து.

கான் சாஹிப் தோழர் ஷேக்தாவூது அவர்களுக்கு மகாஜன ஹைஸ்கூல் கமிட்டியாரும், உபாத்தியாயர்களும் ஒரு விருந்தளித்தார்கள். அவ்விருந்திற்கு முனிசிபல் கௌன்சிலர்களும், வக்கீல்களும், பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். [ஒரு நிருபர்]

தஞ்சை சுயமரியாதைச் சங்கம்.

தஞ்சை சுயமரியாதைச்சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் 26-3-33ந் தேதி மாலை 6 மணிக்கு டை சங்கக்கட்டிடத்தில் மாடமரம் தோழர் சி. சுப்பையா அவர்கள் தலைமையில் கூடிற்று. அது சமயம் பள்ளியக்ரஹாரம் தோழர் சுந்தரம் அவர்கள் கடவுள் உண்டா இல்லையா என்பதுபற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினார்கள். அதைப்பின்பற்றி தோழர்கள் ஒரத்தநாடு எஸ். ஆர். சாமியும், பள்ளியக்ரஹாரம் ஆழ்வந்தான் அவர்களும் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரைக்கு பின் இரவு 8 மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

குருக்களில்லாத சுயமரியாதைத் திருமணம்.

மதுரை தோழர் ஏ. மதுரமுத்து அவர்களுக்கும், திருச்சி வண்ணையம்பதி தங்கம்மாளுக்கும் 9-4-33ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மதுரை பெருமாள் கோவில் தெரு மணவாளன் இல்லத்தில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெறும். தோழர்கள் பல விஜயம் செய்யக் கோரப்படுகிறார்கள்,

(ஒரு நிருபர்)

ரோஜா முத்தையா

1917 வருஷத்திய ரஷியப்புரட்சி.

ருஷ்யதேசம் ஐரோப்பாவின் கிழக்கு பாகத்திலுள்ளது. அதன் விஸ்தீரணம் ஆசியாகண்டத்தின் மேல் பாகத்திலும் கொஞ்சம் பரவியுள்ளது. ருஷ்யா எல்லைக்கும், இந்திய எல்லைக்கும் சுமார் 250 அல்லது மூன்னூறு மைல்களே இருக்கும். அதன் தற்போதைய ஆட்சியானது "ஐக்கிய அபேதவாத சோவியத் குடியரசு" (Union of Socialist Soviat Republic) என்று பெயர். குடிஅரசு என்பது பொது ஜனங்களால் ஏற்படுத்தப்பட்டு பொது ஜனங்களுக்காக, பொதுஜனங்களாலேயே நடத்தப்படும் ஆட்சி நிர்வாகமாகும்.

அபேத வாதம் என்றால் குடிகளில் தொழிலாளி, முதலாளி என்ற வேற்றுமை இல்லாமல், பொதுவுடைமைக் கொள்கையுடன் இருப்பது. எனவே ருஷ்ய ஆட்சியானது சாதாரண குடிஆட்சியாகமட்டும் இன்றிப்பொதுவுடைமை ஸ்தாபனமாகவும் இருக்கிறது. ஆட்சிமுறைக்காக ருஷ்ய ஆட்சி நிர்வாகம் 6 (ஆறு) பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைவருமாறு:—

1. ருஷ்ய அபேதவாத சமஷ்டி சோவியத் குடியரசு.
2. ட்ரான்ஸ்காக்கேஷியன் அபேத வாத சமஷ்டி சோவியத் குடியரசு.
3. உக்கிரோனியக் குடியரசு.
4. வெள்ளை ருஷ்யக் குடியரசு.
5. உஸ்பெக்குடியரசு.
6. டர்க்மன் குடியரசு என்பனவாகிய இந்த ஆறு மாகாணங்களும் ஆறு குடி ஆட்சிகளாய் இருக்கின்றன. இவற்றிற் கெல்லாம்மேலாக "மத்தியக் குடியரசு" இருக்கிறது. ருஷ்யாவின் விஸ்தீரணம் 8,336,864 சதுர மைல் இவ்வளவு பெரிய ராஜியத்தில் அதிக ஜனநெருக்கம் இல்லை. ஏனெனில்பெரும்பாகமான (பூமி) நிலம்மக்கள் வாசத்திற்கு லாயக்கில்லை. 1926ம் வருடம் ருஷ்யாவின்ஜனத் தொகை 146,989460 இதில் நூற்றுக்கு 83 பேர் விவசாயத்தினால் ஜீவிப்பவர்கள். நூற்றுக்கு ஏழுபேர்களே பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாய் இருந்தார்கள்.

சோவியத் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் ருஷ்யாவை அரசர்கள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். ருஷ்ய அரசருக்கு "ஜார்" என்ற பட்டமுண்டு. கடைசியாக ஆட்சி புரிந்த "ஜார்" இரண்டாவது நிகோலஸ் என்பவர். இவருடைய ஆட்சி மிகக் கொடுங்கோன்மையானது "உம்மென்றால்" சிறை வாசம். ஆகையால் தான் காட்டுமிராண்டிகள் போல் நான் புறத்தப் பட்டு வாடி வதங்கிக் கிடந்த ஜனங்கள், புதிதாகவலிமை பெற்று ஒன்று சேர்ந்து திடீரென்று எழுந்து ஜார் சக்கரவர்த்தியை எதிர்த்து கொன்றுக் அவரது ஆட்சியை அழித்து பொதுவுடைமை ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டார்கள். இந்த சம்பவத்தைத்தான், பேர் பெற்ற பெரிய ருஷியப் புரட்சி யென்பது.

1917-ம் வருடம் பிப்ரவரி மாதம் 27ந் தேதி ஆரம்பித்தது ருஷ்யப் புரட்சி. இந்தப் புரட்சியை ஒருவரும் ஏற்பாடு செய்யவில்லை யென்று சோவியத்சர்க்காரின் விரோதிகள் சிலர் சொல்லுகிறார்கள். இது முற்றிலும் உண்மையன்று. புரட்சிக்குப் போதுமான காரணங்கள் பல இருந்ததோடு அதைவளர்க்கப் பல தலைவர்கள் முன் வந்து பதினைந்து வருட காலம் தீவிரமாய் உழைத்து வந்தார்கள் என்பதுமறுக்க முடியாத உண்மை. ஜாரின் கொடுமையோ எல்லை கடந்து விட்டது. ருஷிய தேசத்தின் சட்டசபையாகிய "டூமா" சபை தேவையில்லை யென்று கலைக்கப்பட்டு விட்டது. அன்னிய நாட்டுராஜ தந்திரிகளும் ருஷ்யப் பிரமுகர்களும் "ஜாரை" தலைகால் தெரியாமல் தலை கொழுத்து நடக்க வேண்டாமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் அது பயனற்றுப் போய் விட்டது. என்றாலும் ஜார் சக்கரவர்த்தி யாரையும் எதிர்க்க வல்லமை யற்றுக் கிடந்தார். அவருடைய படைகள் ஐரோப்பிய யுத்தத்தில் சலிப்படைந்து சில சமயங்களில் தோல்வியுற்றுச் சிதறிக் கிடந்தன. இவைகளின் பயனாய் புரட்சி அனல் நாலுகக் கிளம்பி விட்டது.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

மதுரை ஜில்லா முதலாவது

சுயமரியாதை மகாநாடு.

—:0:—

16—4—33 ஞாயிற்றுக்கிழமை (காலை 8-மணி முதல்) மதுரை விக்டோரியா எட்வர்ட்ஹாலில் நடைபெறும்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி மாஜி புரொபஸர்

தோழர் P. லக்ஷிமிநரசு B. A. அவர்கள்

தலைமைவகிப்பார்கள்.

மகாநாட்டிற்கு நமது இயக்கத்தலைவர்களான ஈ. வெ. ராமசாமி, S. ராமநாதன் M. A., B. L., W. P. A. சௌந்திரபாண்டியன் M. L. C, K. முத்துசாமிவல்லத்தரசு B. A., B. L., M. L. C., S. குருசாமி B. A.,—குஞ்சிதம் B. A., L. T., நாகர்கோவில் P. சிதம்பரம், சிதம்பரனார், K. V. அழகர்சாமி, பொன்னம்பலம், S. V. லிங்கம், அ. இராகவன், மாயவரம் சி. நடராஜன், முருகப்பா—மரகதவல்லி, நீலாவதி—ராமசுப்பிரமணியம், ரத்தினசபாபதி—அன்னபூரணி, முதலியவர்களும், இன்னுமற்ற தலைவர்களும் மகாநாட்டிற்கு விஜயம் செய்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

நமது இயக்கத்தோழர்களும், அபிமானிகளும் மகாநாட்டிற்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சகோதரிகளுக்குப் பிரதிநிதிச்சீட்டு சாப்பாடு இடவசதிகள் இனமாக அளிக்கப்படும்.

வரவேற்பு கட்டணம்	ரூ. 3—0—0
பிரதிநிதிகள்	ரூ. 2—0—0
விசிட்டர்கள்	ரூ. 1—0—0

பிரதிநிதிகளுக்கு சாப்பாடு இடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

ஏ. என். வேங்கிடசாமி, பொதுக்காரியதரிசி
உத்தமபாளையம் எஸ். தியாகராஜன் வரவேற்புகமிட்டித்தலைவர்

உதவிகாரியதரிசிகள்.

A. S. அருணாசலம், A. வேணுகோபால்,
M. S. சுப்பிரமணியம், P. V. விநாயகமூர்த்தி,
T. ஆவுடையப்பன்.

S. N. P. N. S. தங்கமணி—உபதலைவர்.
A. A. ஆறுமுகம்—பொக்கிஷதார்.
S. V. இராமலிங்கம்—தொண்டர் படைத்தலைவர்.
A. S. ஆனந்தம்—விளம்பர அதிகாரி.

கொளும்புக்கு ஏஜண்டு தேவை.

நமது பத்திரிகை விற்பதற்கு செல்வாக்குள்ள ஏஜண்டு தேவை விபரத்திற்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

சென்னை ஏஜண்டுகள்.

சென்னையில் நமது பத்திரிகை விற்பதற்குக் கீழ்கண்ட இரண்டு ஏஜண்டுகளை நியமித்திருக்கிறோம். பத்திரிகைவேண்டியவர்கள் இந்த விலாசத்தார்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தோழர் டி. சுப்பிரமணியம்பிள்ளை
2/24 சிவராமன் தெரு,
திருவல்லிக்கேணி சென்னை.

தோழர் பி. ராமநாதன்,
152 தங்கசாலை வீதி, சென்னை.

குடி அரசு.

ஈரோடு 1933 ஏப்ரல் மீ 9-உ

சம்பளக்கொள்ளை.

—:0:—

இந்தியாவுக்கு இன்று உள்ள முதல் கொடுமையும்கடைசிக்கொடுமையும், சம்பளக் கொள்ளை கொடுமையே யாகும்.

இந்தியாவைப் போல் உள்ள ஏழை நாடு உலகில் எங்குமே இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனால் இந்தியாவைப் போல சம்பளக் கொள்ளை உள்ள நாடு உலகில் எங்குமே இல்லை. இதைப் பல தடவைகளில் நாம் எடுத்துக்காட்டி இருக்கிறோம். இந்திய அரசியல் கிளர்ச்சியிலும் இதைப் பற்றி அடிக்கடி பேசப்படுகின்றது. என்றாலும் இதற்கு அஸ்திவாரமானகுற்றத்தை அரசாங்கத்தின் மீது திருப்பப்பட்டு விடுகின்றபடியால் பாமர ஜனங்கள் உண்மையை உணர்ந்து திருத்துப்பாடு செய்வதற்கு மார்க்கமில்லாமல் போய் விடுகின்றது.

சம்பளக் கொள்ளை என்றால் ஒரு சாதாரணக் கொள்ளை என்று யாரும் கருதிவிடக்கூடாது. அது சம்பந்தமாக ஒரு சிறு புள்ளி விபரத்தை கீழே குறிப்பிடுகின்றோம். அது பழைய குறிப்புகளேயானாலும் இது சமயம் இன்றைய இந்தியாவின் நிலைக்கும் அரசியல் நிலைக்கும் சற்று கவனித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

அன்னியனில் பிரிட்டிஷ் முழு ஆட்சிக்கும்பொறுப்பேற்று தலைமை வகித்து நடத்தும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குமாதம்1க்கு 5500 ரூ. சம்பளமே கொடுக்கப்படுகிறது. ஆனால் பிரிட்டிஷ் சுதேசமாகிய இங்கிலாந்துதேசத்திய மக்களின் சராசரி வரும்படி மாதம் ஒன்றுக்கு 72 ரூபாயாகும்.

இது போலவே பிரஞ்சு தேசத்திய பிரசிடெண்டு என்னும் தலைவருக்கு மாதம் 1க்கு 1500 ரூபா சம்பளமேயாகும். பிரஞ்சு தேசத்து மக்களின் சராசரிவரும்படியும் நபர் 1க்கு மாதம் 1க்கு சுமார் 100 ரூபாயாகும்.

அமெரிக்க தேசம் உலகத்திலேயே செல்வம் பொருந்திய தேசம் என்று சொல்லப்படுவது. அந்த தேச மக்களின் சராசரி வரும்படி மாதம் 1க்கு நபர்1க்குசுமார் 120 ரூபாய் ஆகும். அந்த தேசத்தின் மாகாண கவர்னர்களுக்கு சராசரி மாதம் 1க்கு 1000 ரூபாய் வீதமே கொடுக்கப்படுகின்றது.

ஆனால், நபர் ஒன்றுக்கு மாதம் 1க்கு 3 ரூபாய் சராசரி வரும்படி உள்ளது என்று சொல்லப்படும் இந்தியா தேசத்து வைசிராய்க்கு மாதம் 1க்கு 20000 இருபது ஆயிர ரூபாய் சம்பளமும்மாகாண கவர்னர்களுக்கு மாதம் 1க்கு 10000 பத்து ஆயிரம் ரூபாயும் நிர்வாக சபைஅங்கத்தினர்களுக்கு முறையே மாதம் 1க்கு 6500, 5500 வீதமும்மாகாணம் 1க்கு மந்திரிகள்உள்பட 4, 5, 6, 7 பேர்கள் வீதமும் இருந்து மேற்கண்டபடிசம்பளங்கள் பெற்றுவருகின்றார்கள் என்றால் இந்த சம்பளங்களை நிர்வாகச் செலவு என்று சொல்லுவதா, சம்பளத்தின் பேரால் அடிக்கும் பகல் கொள்ளை என்று சொல்லுவதா என்பதை வாசகர்களே முடிவு கட்டிக் கொள்ள விட்டு விடுகின்றோம்.

நிற்க, இது மாத்திரமல்லாமல் இந்திய அரசாங்க பொது ஜனசிப்பந்திகளுடைய சம்பளமும் இது போன்ற ஒரு கொள்ளையாகத் தான் இருந்து வருகின்றது. இன்று இந்தியாவில் தானியம் அதாவது ஆகாரத்துக்கு வேண்டிய நல்ல அரிசியானது ரூபா 1க்கு 6 பட்டணம் படியாக விற்கின்றது ஒரு மனிதனுக்கு குடும்பத்தில் சராசரி குழந்தைகள் உள்பட 5 பேர்கள்இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூடஇவர்களுக்கு நாள் ஒன்றுக்கு பட்டணம் படியில் அதிகமான கணக்குப் போட்டாலும் ஒருபடி அரிசிக்கு மேல் சாப்பிட முடியாது. இந்தப்படியே கணக்கு போட்டுப் பார்த்தாலும் குடும்பம் 1க்கு மாதம் 1க்கு 6 ரூபாய் அரிசி தான் பிடிக்கும் மற்ற சாப்பாட்டுச் செலவு மாதம் 6 ரூபாய் ஆகலாம். வீட்டு வாடகை, எதிர்பாராத சந்தோஷ செலவு மாதம் 8 ரூபாய் ஆகலாம் ஆக இந்தியாவில் ஒரு குடும்பம் போதுமான நிலையில் வாழுவதற்கு குறைந்தது என்று வைத்துக் கொண்டாலும் சராசரி மாதம் 20 ரூபாய் போதுமானதாகும் இதற்கு குறைந்து இருப்பது அநியாயம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம்.

ஆனால், மாதம் 1க்கு நூறு இருநூறு ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய்கள் வீதம் கொடுப்பது எதற்காக என்பது நமக்கு புரியவில்லை. சர்க்கார் சம்பந்தத்தில் உத்தியோகம் வகிக்காதவனுக்கு இன்று மாதம் 1க்கு சரீரவேலைக்காரனுக்கு 8 ரூபாய் வீதமும், புத்தி வேலை,எழுத்து வேலைக்காரர்களுக்கு இருபது அல்லது முப்பது ரூ. வீதம் தான் சாதாரண சம்பளமாகவும், அதிகச் சம்பளமாகவும் இருந்து வருகின்றது. இதுதான் இன்று நல்ல ஜீவனக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களில் 100க்கு 80 மக்களின் வரும்படியாயிருக்கின்றது. இதற்கும்இந்த மக்கள் சராசரி தினம் 10 மணி நேரம் வேலை செய்கின்றார்கள் என்றும் சிலர் 16 மணி நேரம் வேலை செய்கின்றார்கள் என்றும் சொல்ல வேண்டி இருக்கின்றது.

இது போல் மாதம்8 முதல்20 ரூபாவரையில்உள்ள சம்பளத்துக்குக்கூட வேலைகிடைக்காமல் திண்டாடும்மக்கள் 3வது 4வது பாரம் படித்தவர்களும் எஸ். எஸ். எல். சி. மெட்ரிகுலேஷன் படித்தவர்களும் பி. ஏ. வரை படித்தவர்களும் இந்த சென்னை மாகாணத்தில் மாத்திரம் பல லட்சக் கணக்காய் இருக்கின்றார்கள் என்று பந்தயம் கட்டி கூறலாம். இந்தப்படி படித்து விட்டு வேலையில்லாமல் பரதவித்து திண்டாடி தெருவில் மக்கள் லட்சக்கணக்காய் அலையும் போது என்ன அவசியத்தை உத்தேசித்து இந்த சம்பளக் கொள்ளை இந்த நாட்டில் இருந்து வருகின்றது என்பதுகவனித்தால் அதன் குட்டு நன்றாய் விளங்கும். "நிர்வாகச் செலவு தலை கனத்துப் போய் விட்டது" என்பதின் கருத்து சம்பளக்கொள்ளை என்பதைத்தவிரவேறு யாதொரு காரணமும் கிடையாது. என்பதும் விளங்கும்.

சம்பளக் கொள்ளையின் காரணமேவரி உயர்வுக்கும், வரிக் கொடுமைக்கும் காரணமேதவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் இதை எந்த தேசீய வாதிகளும் கவனித்து தீவிர நடவடிக்கைகளையெடுத்துக்கொள்வதே கிடையாது. அரசியல் வாதிகள் தேசியவாதிகள் என்பவர்கள் ஜனங்களிடம் ஓட்டுக் கேட்க வரும்போது "வரியைக் குறைக்கின்றோம்" என்று சொல்லி ஓட்டுக்கேழ்ப்பதும் அரசாங்க சிப்பந்திகளிடம் வந்து அவர்களது "சம்பளங்களை உயர்த்துகிறோம்" என்று சொல்லி தங்கள் காரியங்களைச்சாதித்துக்கொள்வதுமான சூழ்ச்சிகளைச்செய்கிறவர்களாகத்தான் இருக்கிறார்களே ஒழிய சம்பளத்தைக்குறைக்க வாதாடி வரியைக்குறைப்பது என்கின்றதிட்டம் நமது நாட்டின் எந்த ஸ்தாபனத்திலும் இல்லை.

ஒரு வேலைக்கு ஒரு ஆள் தேவையானால் அந்த ஆளுக்குபெரிதும் எந்தக்காரணத்தை அஸ்திவாரமாகக் கொண்டு சம்பளம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அந்த ஆளின் வாழ்க்கைச்செலவை உத்தேசித்து என்றுதான் சொல்லுவோம். ஆனால் அந்த செலவில் ஏதாவது சிறிது வித்தியாசம் அதுவும் அந்த ஆள் பார்க்கவேண்டிய உத்தியோக நிலைமைக்கு வேண்டிய அளவான சவுகரிய வித்தியாசம் எவ்வளவோ அதற்குஏற்றபடி கொடுக்கலாம்என்றும் சொல்லுவோம் அப்படிக்கில்லாமல் அதிகமான செலவையும் போட்டு கணக்கு கூட்டி அதற்கும் மேலாகதாராளமாய்மாதம்100,200,1000,5000 மீறிஆகும்படியும்சம்பளம் ஏற்படுத்துவது என்றால் இதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பதை இப்போதாவது யோசித்துப் பாருங்கள்.

ஒரு தேசத்து மக்களை அந்த தேசத்து பொது நிர்வாகத்திற்கே ஏன்இந்தப்படி வித்தியாசமாகபிரிக்கவேண்டும்? அதுவும்அந்ததேசத்து மக்கள்கஷ்டப்பட்டுத்தேடிய பொருளையே பலவிதத்தும் வரி ரூபமாகக் கொள்ளைகொண்டு அதை இந்தப்படி ஒரு சிலர் கொள்ளையடிக்க ஏன் இடந்தரவேண்டும்? என்பனவாகியவற்றை யோசித்தால் மனம் பதறுகின்றது. அரசியல் ஆதிக்கத்திலும், அரசியல் கிளர்ச்சியிலும் இதுவரை பார்ப்பனர்களே ஆதிக்கம் கொண்டிருந்தாலும் வரிகொடுக்க வேண்டிய மக்கள் எல்லோரும்100க்கு99 பேர்பார்ப்பனரல்லாதார்களாகவே இருந்தாலும் சம்பளம் பயன் பெறும் மக்கள் பெரும்பாலும் 100க்கு90 மக்கள் பார்ப்பனர்களாகவே இருந்தாலும் இந்தப்படியான சம்ப

ளக்கொள்ளைகள் ஏற்படவேண்டியதாயிற்று. ஆனால் இப்போது ஜனங்கள் படுகின்ற கஷ்டத்தையும், நஷ்டத்தையும், பரதவிப்பையும் பார்த்தால் இந்த சம்பளக் கொள்ளையை ஒழித்தாகவேண்டியது முதற்கடமை என்றே தோன்றுகின்றது.

சம்பள விஷயத்தில் இவ்வளவு வித்தியாசம் வைத்து இருப்பதானது அவ்வளவும் பாடுபடுகிற சிப்பந்திகளுக்கு குறைந்த சம்பளமும் அதிக நேர உழைப்பும், பாடுபடாத சிப்பந்திகளுக்கு சோம்பேறிகளுக்கு கொஞ்சம் நேர வேலையும் அதிகசம்பளமும் இருக்கின்ற முறை அடியோடு ஒழித்தே ஆகவேண்டும். மற்றும் இவற்றைப் பற்றிய விபரங்களை மற்றொரு சமயம் எழுதலாம் என்றுவிட்டுவிட்டு முக்கியமான மற்றொரு விஷயத்தில் மக்களுக்கு உள்ள கஷ்டத்தைப்பற்றி சிறிது குறிப்பிட்டு விட்டு இதை முடிக்கின்றோம்.

அதென்னவென்றால் ஆங்கிலம் கற்பிக்கும் உபாத்தியாயர்களின் சம்பளத்தைப்பற்றிய விஷயமேயாகும்.

உபாத்தியாயர்.

வருஷம் ஒன்றுக்கு 365நாள் என்றால் இந்த பள்ளிக்கூடஉபாத்தியாயர்களுக்கு பொது லீவுகள் 120நாளும்சனி ஞாயிறுலீவுகளில் 70 நாள்களும் மொத்தம் குறைத்து சுமார்180நாள் அதாவது6மாத காலம் பள்ளிக்கூடம் இல்லாத லீவுநாள்களாகும். இந்த ஆறு மாத காலம் கழிந்த மற்ற ஆறு மாத காலங்களிலும் அவர்கள் வேலை பார்க்கும் நேரம்தினம் 1க்கு காலையில் 2½ மணியும், மாலையில் 2½ மணியும் ஆக 5 மணி அல்லது 4½ மணி நேரம் தான் வேலை பார்க்கின்றார்கள். ஒரு வருஷத்தில் 6மாத வேலைக்கு அதுவும் தினம் 4½ மணிநேர உழைப்புக்கு சம்பளம் என்னவென்று பார்த்தால் மாதம் 1-க்கு பி. ஏ. எல். டி. என்பவர்களுக்கு 70 ரூபாயில் இருந்து சாதாரணமாக 250 ரூபாய்வரையில் இருந்து வருகின்றது. இந்த சம்பளங்கள் பெரும்வரிப்பணத்தில் இல்லாமல்பிள்ளைகளிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றன. இந்த சம்பளக்கொடுமை காரணமாகவே 100-க்கு 95 பிள்ளைகள் ஆங்கிலத்தில் ஒரு எழுத்துங்கூட கற்க முடியாமலிருந்துவருகின்றனர். பணமுள்ள பிள்ளைகள் மாத்திரம் தான் படிக்கக்கூடியதாக இருப்பதற்குக்காரணம் இந்த உபாத்தியார்களின் சம்பளக்கொள்ளை என்பதைத்தவிர வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்?

"படித்தவர்களுக்குத்தான் உத்தியோகம்" என்றும் "பணக்காரர்கள் வீட்டுப்பிள்ளைகள்தான் படிக்கக்கூடும்" என்றும் ஏற்பாடுசெய்திருப்பதை பொது ஜன ஆட்சி என்று சொல்லுவதா? பணக்காரர்கள் ஆட்சி என்று சொல்லுவதா? என்பதை யோசித்துப் பாருங்கள். எல்லாப்பிள்ளைகளுக்கும் சாதாரணமாய் படிக்கக்கூடிய சௌகரியம் செய்திருந்தால் பொது உத்தியோகங்களில் இந்த சம்பளக்கொள்ளை ஏற்பட்டே இருக்காது. இந்த நிலையில் எப்படி ஏற்பட்ட வகுப்புகள்-தாழ்த்தப்பட்ட வகுப்புகள் முன்னேற்றமடைய முடியும்? என்று கேட்கின்றோம்.

சாதாரணமாக, ஒரு பி. ஏ. எல். டி.யை ரூ 30 ரூபா சம்பளத்தில் ஆரம்பிப்பது உறுதி என்று சொல்லி இன்றைய தினம் ஒரு விளம்பரம் வெளிப்படுத்தி விட்டு டிரெய்னிங் (போதனை முறை)பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பித்தால் இந்த மாகாணத்தில் மாத்திரம் இன்று பி. ஏ., எம். ஏ. க்களிலிருந்தே குறைந்தது 5000 விண்ணப்பங்கள் எதிர் பார்க்கலாம் இவர்களிடம் இப்போதைய பி. ஏ. எல். டி. களிடம் வாங்கும் வேலையை விட 4 பங்கு வேலை அதிகமாக வாங்கலாம். இப்படி இருக்க கல்வியின் பேரால் உபாத்தியாயர்கள் என்கின்ற உத்தியோகத்திற்கு எவ்வளவு பணம் விரையமாகி எவ்வளவு பேர் படிக்க முடியாமல் போய் விடுகின்றது என்பதையும் உணரவேண்டுகின்றோம்.

இவ்வளவு பணம் செலவு செய்யும் உபாத்தியாயர்கள் என்பவர்கள் இவ்வளவு பணம் பொது மக்களிடம் இருந்து அடித்துப் பிடுங்குவது போல்பிடுங்கி அனுபவித்தும் சராசரி 100க்கு 25 பிள்ளைகள்கூடபாசாவதே கஷ்டமாய் இருக்கின்றதென்றால் இக்கல்வியின் அக்கிரமத்தையும், உபாத்தியாயர்களின் பொருப்பற்ற தன்மையையும், கொடுமையையும் பற்றிச் சொல்ல வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

இந்த லட்சணத்தில் இருக்கும் கல்வி நிருவாகத்திற்கு சர்க்கார் செய்யும் செலவு எவ்வளவு என்பதையும் நிர்வாக அதிகாரிகள் மந்திரி உள்பட மாதம் 5000, 3000 2000, 1000, 500, 200 என்பதாக அடிக்கும் கொள்ளை எவ்வளவு என்பதையும் பார்த்தால் யார் மனந்தான் பதறாமலிருக்க முடியும்.

வக்கீல்.

இது ஒரு புறமிருக்க வக்கீல் என்கின்ற ஒரு கூட்டம் அடிக்கும் கொள்ளைக்கும், அவர்களால் ஏற்படும் அயோக்கியத்தனத்திற்கும் அதாவது ஒரு எல்லை கட்டவாவது முடியுமா? என்று பாருங்கள்.

எவ்வளவு குறைவாகக் கணக்குப்போட்டு பார்த்தாலும் இந்த மாகாணத்தில் மாத்திரம் சுதேச சமஸ்தானங்கள் உள்பட சுமார் 12500 வக்கீல்களுக்கு குறையாமல் இருப்பார்களென்றே கருதுகிறோம். இவர்கள் வாழ்க்கை மனித சமூக வாழ்க்கைக்கு அநுகூலமானதா பிரதிகூலமானதா என்பதை வக்கீல்களைக்கேட்டாலே 100க்கு 99% பேர்கள் நன்றாய் சொல்லுவார்கள். அப்படி சொல்லுவார்களென்றால் "மனித சமூக ஒழுக்கத்திற்கும் சமாதானத்துக்கும் நாங்கள் "நரையான்கள்" போல் இருக்கின்றோம்" என்றே சொல்லுவார்கள். இந்நரையான்களால் ஏற்படும் கெடுதிகள் கள்ளுக்கடை, சாராயக்கடை, விபசாரவிடுதி, சூதாடுமிடம், மதஉபதேசம் ஆகிய எல்லா கொடுமைகளைவிட எத்தனையோமடங்கு அதிகமானதென்றே சொல்லலாம். இப்பேர்ப்பட்ட அதாவது நன்மைக்கு நரையான் போன்றதும் தீமைக்கு பிறப்பிடம்போன்றதுமான இந்த வக்கீல்களால் பொதுமக்களால் பாழாக்கப்படும் உழைத்துத்தேடிய செல்வம் எவ்வளவு? நேரம் எவ்வளவு? மனக்கவலை எவ்வளவு? மற்றும்இந்தக்கூட்டங்களை ஆதரிக்க அதாவது இந்த வக்கீல்கள் தங்கள் கொடுமையைச் செய்வதற்கு அநுகூலமாக ஏற்பட்டிருக்கும் கோர்ட்டுகள் தன்மையும் வெறும் சூதாட்ட மண்டபமென்பதல்லாமல் அதற்கு வேறு என்ன பெயர் வைக்கக்கூடும் என்பதையும் வாசகர்களே யோசித்துப்பார்க்கட்டும். 'நியாயம்' பெறுவதற்குமாத்திரம் எவ்வளவு செலவு செய்யவேண்டியிருக்கிறது? நியாயஸ்தலத்துக்கு மாத்திரம் பொது ஜனங்களது பணத்தில் எவ்வளவு பணம் செலவு ஆகின்றது? என்பவைகள் நினைப்பதற்கே பயமான காரியமாகும். ஒரு சென்னை ஐகோர்ட்டைமாத்திரம் ஒழித்தால் 100000 பேர்கள் நன்றாக சாப்பிடவும், படிக்கவும் போதிய செல்வம் மீதியாகும்.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்தியாவை ஏழை தேசம் என்றழைப்பதா அல்லது இந்திய தேசத்தாரையே ஒருவரை ஒருவர் ஏமாற்றி வஞ்சித்து வதைத்து சாப்பிடும் நரமாம்சபக்ஷணை தேசம் என்று அழைப்பதா என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட காரியங்கள் உற்பத்தியாவதற்கு அனுமதிகொடுத்து ஆதரித்துவரும் சர்க்காரின் யோக்கியதையையும் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் "வரிப்பணத்தையும் மேல் பார்வை உத்தியோகத்தையும் எங்கள் கையில் கொடுத்துவிடவேண்டும்" என்று கேட்கும் தேசியத்தையும் முதலாளிகள் ஆட்சி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும். ஆதலால் இக்கொடுமைகள் ஒழிய முதலில் முதலாளிகள் ஆட்சியும், முதலாளிகள் தேசியமும் ஒழிக்கப்படவேண்டியதே முக்கியகாரியமாகும் என்பதையும் இக்காரியத்தை சுயமரியாதை இயக்கம் செய்யப்போகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஈரோடு முனிசிபாலிடி கவனிக்குமா?

வைத்திய உதவி.

இன்றைய நிலையில் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள்பட்ட ஜனங்களுக்கு பொது வைத்திய உதவி பொருப்புள்ளதாகவும் போதுமானதாகவும் இல்லை என்பதைக்குறிக்க வருந்தவேண்டியிருக்கின்றது. ஈரோட்டிலிருந்த முனிசிபல் ஆஸ்பத்திரியானது சுமார் 12-வருஷங்களுக்கு முன் சர்க்கார் ஆஸ்பத்திரியாக மாறின போது முனிசிபல் நிர்வாகத்தைவிட சர்க்கார் நிர்வாகம் சற்றுமேலாகவேஇருக்குமென்று ஜனங்கள் கருதினார்கள். அந்தப்படியே சில காலம் நடந்தும் வந்தது.

ஆனால் நாளாக நாளாக அந்த ஆஸ்பத்திரிக்கு பொது ஜனங்களுடைய தயவைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை என்கின்ற மாதிரியிலேயேஅதன் மேலதிகாரிகளால் நடைபெற்று வருவதாய் காணப்படுகிறது.

இதற்கு முக்கியகாரணம் சர்க்கார் நிர்வாகமேயாகும். ஈரோடு ஆஸ்பத்திரி டவுன் ஜனங்கள் 35000 பேருக்கும், சமீப சுற்று

ப்பக்கத்துஜனங்கள் சுமார் 20000 பேருக்குமாக 50000 பேருக்கு மேல் பயன்படவேண்டியதாய் இருந்து இவர்களில் பெரிதும் ஏழைமக்களுக்கு ஆகவே இந்த ஆஸ்பத்திரி இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட ஆஸ்பத்திரியில் ஒரு சர்க்கார் சம்பள டாக்டர் இருக்கிறார் என்றாலும் கௌரவ டாக்டர்கள் என்பதாக இரண்டு மூன்று பிரைவேட் டாக்டர்களை நியமித்திருப்பதால் சம்பள டாக்டருக்கும் சம்பளமில்லாத டாக்டர்களுக்கும் மற்றும் தங்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் உள்ள அசையாலும், பொறாமையாலும் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளின் சிகிச்சை பெரிதும் பாதிக்கப்படுவதோடு நோயாளிகள் விஷயத்தில் யாருக்கும் பொருப்பில்லாமல் கடன் கட்டுகிறமாதிரியில் நடைபெறுகின்றது. பணம் கிடைக்கக்கூடிய வைத்தியம்—பணக்காரன் வைத்தியம்—நாளை மறுநாள் தன்னையே குடும்பவைத்தியனாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் வைத்தியம் முதலாகிய இவைகள் தான் சிறிது கவலையாய் கவனிக்கப்படுகின்றதே தவிர ஏழைகள் தொழிலாளிகள் பாடு கஷ்டம்தான்.

கௌரவ வைத்தியர்களை ஏற்படுத்தியதின் பயனை ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் பிரைவேட் டாக்டர்கள் பிரைவேட்டாக பணம் வாங்கிக்கொண்டு செய்யும் வைத்தியத்திற்கு ஆஸ்பத்திரியில் இருந்து மருந்துகளை எடுத்துக்கொடுக்க பயன்படுகின்றது என்றுதான் சொல்லவேண்டும். மற்றும் பிரைவெட் டாக்டர்கள் தங்கள் தொழிலை விர்த்தி செய்துகொள்ள ஆஸ்பத்திரி பயன்படுத்தப்படுகின்றது என்றும் சொல்லவேண்டும்.

இது எப்படியோ போகட்டும் என்றாலும் பொது ஜனங்களுக்கு இதனால் இருக்கும் அசௌகரியம் மிகவும் கவனிக்கத்தக்கதாய் இருக்கின்றதுடன் மற்றொரு விஷயம் என்னவென்றால் குதிரை கீழேதள்ளியதுமல்லாமல் குழியும் தோண்டிற்றும் என்பதுபோல் பெண்கள் சம்பந்தமான குழந்தைகள் சம்மந்தமான வைத்தியம் பார்க்கும் லேடி (பெண்) டாக்டர் ஸ்தானம் ஒன்று சுமார் சுமார் 25 வருஷ காலமாக இந்த ஆஸ்பத்திரிக்கு இருந்து வந்தது இந்த கௌரவ டாக்டர் முறை அதிலும் போய் புகுந்து அந்த சம்பள டாக்டரையே எடுத்து விடும்படி செய்துவிட்டது. இப்போது ஈரோட்டிற்கு பெண் டாக்டர் இல்லை பொதுவாக இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் கௌரவ உத்தியோகங்கள் எந்த நிலைமையில் எவ்வளவு கன்னியத்தில் நடைபெறுகின்றன என்பதை நாம் எடுத்துக்காட்டத் தேவையில்லை. அதிலும் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம் என்றும், என்னதப்பு செய்தாலும் தொழில் மரியாதையை அனுசரித்து மேல் அதிகாரிகளும் சகோதரத் தொழிலாளிகளும் அத் தப்பிதத்தை வெளிக்குக் காட்டாமல் ஆதரித்தே ஆகவேண்டும் என்கின்ற கொள்கையுடைய டாக்டர் உத்தியோகம் ஒரு கௌரவ உத்தியோகமாக இருந்தால் அதன் கொடுமையை யாரால்தான் வர்ணிக்கமுடியும்? ஆதலால் இன்று மேல்கண்ட 50 ஆயிரம் ஜனங்கள்கொண்ட ஈரோட்டில் குழந்தைகளும் பெண்களுமான சுமார் 30ஆயிரம் பேர்களுக்கு வைத்தியம் மிகவும் பரிதாபகரமாகவே இருந்துவருகின்றது. இங்கு மிஷின் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கின்றது என்றாலும் அது ஒரு மதசம்பந்தமானதும், மதப்பிரசாரத்தைக் குறிக்கொண்டதும், பொது ஜனங்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்புக்குக் கட்டுப்படாததுமாகும்.

ஆதலால் அதைப்பற்றி நாம் பேசுவதற்கு நமக்கு எவ்வித அருகதையும் உரிமையும் கிடையாது.

நிற்க, இன்றைய மக்கள் சாவுகளிலெல்லாம் அதிகமானசாவும், அநியாயமான சாவும், காயலாவும், பெண்கள் பிரசவ சாவும் காயலாவுமேயாகும். அதோடு பிரசவ குழந்தைகள் வியாதியும் பெண்கள் வியாதியுமே இயற்கையிலே அதிகமாயிருக்கின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இதுசமயம் ஈரோட்டில் பிரசவ கேசுகளைக் கவனிக்க எப்படிப்பட்ட ஏழையானாலும் வீடுகளுக்கு யாராவது வரவேண்டுமானால் 5 ரூபாய், 10 ரூபாய் கொடுக்காமல் முடியவே முடியாது. முனிசிபல் மருத்துவச்சிகளின் ரேட்டோ, சர்க்கார் டாக்டர், கௌரவ டாக்டர்கள், பிரைவேட் டாக்டர்கள் பீசுகளைவிட அதிகமாகவும் நோயாளிகளிடம் மரியாதையில்லாமல் நடந்து கொள்ளுவதும் அதிகாரம் செலுத்துவதுமான காரியங்கள் அதிகமென்றே சொல்லவேண்டும். ஆகையால் இந்தநிலையில் பெண்கள் வைத்திய வசதி நிலைஇதுசமயம்ஈரோட்டில்மிகவும் மோசமாகவே இருந்து வருகின்றது. இந்த ஆண் பெண் வைத்திய வசதி விஷயங்களிலும் இதில் நடக்கும் கொடுமை விஷயங்களிலும் இன்னும் அநேக உண்மைகளை எடுத்துக்காட்டலாம் என்றாலும் அவை கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் ஆகிவிடுமாதலால் பொதுவாக இக்கஷ்டங்களைப்பற்றி சர்க்காருக்கு முனிசிபாலிடியார் எடுத்துச் சொல்லி அவர்கள் செவிசாய்க்காமல் போனால் உடனே முனிசிபாலிடி சார்பாகவாவது ஒரு லேடி டாக்டரை இந்த ஊருக்கு வரவழைத்து ஒரு சிறிய கட்டடத்தில் மருந்துகள் வைத்துப் பெண்களுக்கும் சிறப்பாக பிரசவப் பெண்களுக்கும் இலவச வைத்திய வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுகோருகின்றோம்.

ஈரோடு முனிசிபாலிடியில் இப்பொழுதுள்ள இரண்டு மருத்துவச்சிகளையும் எடுத்துவிட்டால் மாதம் 60 ரூ. மீதியாகும். 20 ரூ. அல்லது 25 ரூபாயில் ஒரு மருத்துவச்சியும் மாதம் 50 அல்லது 60 ரூபாயில் ஒரு லேடி அசிஸ்டெண்ட் சர்ஜனைப் போட்டுவிட்டால் முனிசிபாலிடிக்கு இப்பொழுதிருப்பதைவிட மாதம் 20 அல்லது 25 ரூபாய் தான் அதிக செலவாகும். மருந்துகள் அவரவர்களே வாங்கிக்கொள்ளுவார்கள். ஏழைகளுக்கு ஏதோ மாதம் 5 அல்லது 10 ரூபாய் மருந்துகள் வாங்கினால் சரிசெய்துகொள்ளலாம். இது முக்கியமான விஷயமானதால் முனிசிபல் கௌன்சிலர் கனவான்கள் இதை அவசியம் கவனிப்பார்கள் என்று கருதுகிறோம்.

தோழர்கள் ஆர். கிஷன்— இராமசுந்திரம் திருமணம்.

தோழர்கள் ஆர். கிஷன் அவர்கட்கும், இராமசுந்திரம் அவர்கட்கும் சென்ற 6-4-33ந்தேதி மாலை 5மணிக்கு ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கமண்டபத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மணமக்களை தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் இல்லத்திலிருந்து வாத்தியத்துடன் சுயமரியாதை வாலிபர் சங்கக்கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது.

சங்க மண்டபம் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

திருமணத்திற்கு சுமார் 1000பேர்களுக்கு மேலாகவே வந்திருந்தார்கள். இடமின்மையால் சிலர் திரும்பிச் சென்றார்கள். பெண்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்.

தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, ஈ. வெ. ரா. நாகம்மாள், ஈ. வி. கிருஷ்ணசாமி, ஈ.வி. கே. ரங்கநாயகிஅம்மாள், எஸ். இராமசாமி, எஸ். ஆர். சண்ணம்மாள், கருங்கல்பாளையம் ஷண்முகம்பிள்ளை, கான்சாஹிப், கே. எ. சேக்தாவூது, எம். சிக்கையா, ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு, கேசவலால் காளிதாஸ்சேட், எஸ். மீனாக்ஷிசுந்திரம், பி. ஏ. எல். டி., ஹெட்மாஸ்டர் மகாஜனஹைஸ்கூல், பெரியசாமி முதலியார், முருகேச முதலியார், டாக்டர் கிருஷ்ணசாமி. தாயாரம்மாள், ஈ. ஓ சி. எம். கிருஷ்ணசாமி, ஈ. ஓ. சி. எம். காமாக்ஷியம்மாள், ரங்கம்மாள், ஈ. வி. லெக்ஷிமியம்மாள், எ. ஜி இராமசாமி, பொன்னம்மாள், இராமநாதமேனன், வீராசாமி, காத்தமுத்து, வெங்கிட்சாமிரவுத் பெருமாள்நாயடு, வரதப்பன், ஆறுமுகம், சேலம் நடேசன், பாலுசாமி, அம்புலு, திருச்செங்கோடு எஸ். சி. ரங்கசாமி, வரதராஜலு, கைலாசம் திருச்சி வாசு, திருப்பூர் டி. பி. இராமசாமி, ஆர். டி. எல்லநாயகம், டி. டி. கோபால், எச். பாஷா சுந்தரராஜ். கணேசமூர்த்தி சி. ராஜகோபால் பி. ஏ. ஸ்ரீனிவாசன், பாபுசாமி, அஜீஸ், முத்தலீப், ரத்தினசாமி, மாரியப்பதம்பதிகள், நெல்லையப்பர், என். ராமசாமி ஈ. வி. ஜெயராம், மரிதாஸ் கரிவரதசாமி, வி. ராமசாமி வி. லக்ஷ்மணசாமி, ஜானகி, காந்தம்மாள் ஆகியவர்களும் இன்னும் பலருமாவார்கள் தோழர் ஈ. வி. இராமசாமி தலைமைவகித்து முகவுரையாக திருமணம் என்பது பற்றி மிகத் தெளிவாகப் பேசினார். பின் தோழர்கள் சேலம் நடேசன் ஹெட்மாஸ்டர் மீனாக்ஷிசுந்தர முதலியார், உபாத்தியாயர் ரங்கம்மாள், திருச்சி வாசு, கிருஷ்ணசாமி, 10 வயதுள்ள சிறுமி ஜானகி ஆகியவர்களும் திருமணத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையாகப் பேசிய பின். திருமணத்தைப் பாராட்டி பல கடிதங்களும், தந்திகளும் அனுப்பியிருந்ததை தலைவர் வாசித்தார். கடிதம் அனுப்பியிருந்தவர்கள் பெயர்கள் வருமாறு; தோழர்கள் சென்னை எஸ். குருசாமி பி. ஏ. எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. எஸ். நீலாவதி, ராமசுப்பிரமணியம், டி. என். ராமன் கானகாம்புஜம், கோவை ஜில்லா அர்ம்பாங் மானேஜர், ஆர். லோகநாதன் (தோழர் கிஷன் தமையனார்) திருப்பூர் சி. பி. அப்பையா சந்தானம் ச. ம. சி. பரமசிவம், தஞ்சை சுயமரியாதைச் சங்கக்காரியதரிசி, நாகை சுயமரியாதைச் சங்கக்காரியதரிசி, இன்னும் பலருமாவார்கள் அன்றிரவு தோழர் ஈ. வி. ஆர். அவர்கள் இல்லத்தில் ஒரு விருந்து நடைபெற்றது மறுநாள் காலை மண மக்கள் கோவைக்குச் சென்றார்கள்.

[ஒரு நிருபர்]

திருச்சியில் தோழர்கள் சின்னராமாயி— பாக்கியநாதன் தம்பதிகளுக்கு விருந்து.

சிலதினங்கள் முன்பு ஈரோட்டில் சுயமரியாதை முறையில் மணம் செய்துகொண்ட திண்டுக்கல் தோழர் சின்னராமாயி—பாக்கியநாதன் தம்பதிகள் ஈரோட்டினின்றும் 25-3-33 சனிக்கிழமையன்று பகல் 12 மணிக்கு திருச்சி கோட்டை ஸ்டேஷன் வந்திறங்கினார்கள். ஸ்டேஷனில் பல தோழர்களால் வரவேற்கப்பட்டு தோழர் லீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்று ஷை யார்கள் விருந்தினராயிருந்தனர். அன்று மாலை பல தோழர்கள் உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்து பார்த்துச்சென்றனர். 26-3-33 ஞாயிற்றுக்கிழமை பகல் பாலக்கரை தோழர் எ. சாமுவேல் அவர்கள் இல்லத்தில் ஷையார்களுக்கு பல நண்பர்களுடன் ஒரு விருந்து நடைபெற்றது. அதன் பிறகு மாலையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடத்துவதாக ஏற்பாடு செய்திருந்தபடி கேம்ப் டவுன் ஆலம் ஸ்ரீட்டின் மைதானத்தில் மாலை 6-மணிக்கு ஓர் கூட்டம் தீண்டப்படாத கத்தோலிக்க வாலிபர்களால் கூட்டப்பெற்றது. ஷை கூட்டத்திற்கு ஏராளமான ஆடவர்களும், பெண்களும் வந்திருந்தார்கள். கூட்ட ஆரம்பத்தில் சுயமரியாதை கீதம் பாடப்பெற்றது. பின்பு தோழர் அற்புதசாமி அவர்கள் தலைமை வகித்து நடத்திக்கொடுக்குமாறு தோழர் ராஜமாணிக்கம் பிரேரேபித்தார். அதை தோழர் பர்னந்து ஆமோதித்தார். பின்பு தோழர் அற்புதசாமி அவர்கள் தலைமை வகித்து முகவுரையாக கூறியதின் சாரம் பின் வருமாறு:—

தோழர்களே! நாம் இங்கு கூட்டப்பெற்றிருப்பது சிலதினங்கள் முன்பு சுயமரியாதை முறையில் ஈரோட்டில் திருமணம் செய்துகொண்டவர்களான தோழர்கள் சின்னராமாயி—பாக்கியநாதன் தம்பதிகளைப் பாராட்டுவதற்காக வேண்டி இங்கு கூட்டப்பட்டிருக்கிறோம். மணமகளும், மணமகனும் தங்கள் விருப்பத்தை சுயமரியாதை முறையில் திருமணம் புரிந்துகொண்டதானது மிக[illegible] போற்றத்தக்கதாகும். இம்மாதிரி செய்கையில் ஒவ்வொருவரும் செய்து காட்டினால் தான் நாம் கோரிய பலனை அடைய முடியும் அப்படிக்கில்லாது வாயினால் மட்டும் பேசிவிட்டுப்போவதில் பிரயோசனமில்லை. இன்று பாராட்டுக்கூட்டத்தில் தீண்டப்படாத கத்தோலிக்க வாலிபர்களால் மணமக்களுக்கு ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது அதைவாசித்து கொடுக்குமாறு வேண்டுகிறேன். பின்புதோழர் ராஜமாணிக்கம் மணமக்களுக்கு கீழ்கண்டவாறு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்.

பின்பு தோழர் பாக்கியநாதன் வரவேற்பு பத்திரத்திற்கு பதிலளிக்கு முகத்தான் பேசியதாவது —

தோழர்களே!

இன்று எங்களை பாராட்டுவதற்காகவேண்டி ஓர் வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுத்தமைக்கு நாங்கள் வந்தனம் செலுத்துகிறோம். மேலும் நாங்கள் ஈரோட்டில் திருமணம் செய்துகொண்டபொழுது பல தோழர்கள் எங்களுக்கு ஊக்கமளித்தார்கள். அதேபோன்று திருச்சியிலும் யாதொரு குறைவுமின்றி மேலும் மேலும் தோழர்கள் ஊக்கமளித்ததானது எங்களுக்கு அதிக உற்சாகத்தையே கொடுக்கிறது. எங்களுக்கு வாழ்க்கையில் பலர் இன்னல் விளைவித்தாலும் அதைப்பற்றி கவலையில்லை. இம்மாதிரி தோழர்கள் ஊக்கமளிப்பதைத்தான் நாங்கள் பெரிதென நினைக்கிறோம். நாங்கள் பெரிய விஷயத்தை செய்து விட்டதாக வரவேற்புப் பத்திரத்தில் கூறியிருக்கிறீர்கள். நாங்கள் அப்படிசெய்திருப்பதானது உங்கள் போன்ற வாலிபர்களின் நல் முயற்சியாலும், சுயமரியாதை இயக்கத்தாலும், குடிஅரசு பத்திரிகையின் உபதேசத்தாலும் என்று தான் கூறுவேன். எங்களை பாராட்டிய உங்களுக்கு நன்றி செலுத்துவதுடன் இந்நன்றி மறக்கமாட்டோம் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பிறகு பேசியவர்கள் தோழர்

ராஜமாணிக்கம்.

இன்று பாராட்டுக் கூட்டத்திற்கு உரியவர்களான தோழர் சின்னராமாயி—பாக்கியநாதன் தம்பதிகள் இளைஞர் உலகத்திற்கு தங்கள் கடமையை உண்மையாக செய்கை மூலம் காட்டியதற்கு நான் மிக சந்தோஷப்படுகிறேன். நமது நாட்டில் திருமணம் என்றால் மணமக்களை கட்டாயப்படுத்தி ஒருவருக்கொருவர் பிடித்தமில்லாதவர்களை சேர்த்து வைப்பதுதான் என்று ஏற்பட்டிருக்கிறது. அதை தவறு என்று உணரும் காலம் வந்துவிட்டது மிக சந்தோஷப்படக்கூடியதாகும்

எஸ். லீலாவதி.

எனது கால் நோவினால் எங்கும் செல்லமுடியாமலிருந்தும்கூட இக்கூட்டத்திற்கு முக்கியமாய் வரவேண்டுமென்று தோன்றியதானது இங்கு பாராட்டுவதற்கு உரியவர்களாக இருக்கும் தோழர் சின்னராமாயி-பாக்கியநாதன் தம்பதிகளின் வீரச்செய்கையே காரணமாகும். தோழர் சின்னராமாயி மூன்று வருடங்களுக்கு முன்பு இரண்டு மனைவிகளை உடைத்தான், பிள்ளை பிறக்க வேண்டுமென்பதற்காக மணம் புரிந்துகொள்ள விரும்பிய சுமார் அறுபதுஎழுபது வயதுவாலிபருக்குமணம் புரிந்து கொடுக்கப்பட்ட சகோதரிகளில் ஒருவராகும். மேற்படி மணம் செய்யும் காலை சகோதரி சின்னராமாயி கிழவனை கட்டிக்கொள்ள மாட்டேன் என்று எவ்வளவோ தடுத்துப்பார்த்தும் சாதி கட்டுப்பாட்டுக்காரர்களின் கட்டாயம் காரணத்தினால் மணம் புரிந்து வாழாமல் இருந்ததாகும்.

சிறிதுகூட படிப்பு வாசனையில்லாத இந்த இளஞ்சகோதரி படித்திருந்தும் மூடப்பழக்க வழக்கத்தை கைக்கொண்டுள்ள சகோதரி-சகோதரர் களுக்கு இம்மாதிரி செய்கையில் செய்து காட்டினபிறகும் முன்னேற்றமடைகளில் செல்லாமலிருப்பார்களானால் அவர்கள்நாட்டிற்கு ஓர் கேடு பயக்கும் உருவங்கள் என்று தான் கூறவேண்டும் தெரியாத அக்கிரமங்கள் ஒரு புறமிருக்க தெரிந்த அக்கிரமங்களையாவது மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடியநாம் திருத்திக்கொள்ள வேண்டாமா? தோழர் பாக்கியநாதன் கிருஸ்தவராக இருந்து இந்தப்பெண்ணை மணந்து கொண்டதானது மிகபாராட்டக் கூடியதுமாகும். இழுட்டுப் பிணைகளை கட்டகட்டாயப்படுத்தப்பட்ட மற்ற சகோதரிகளும் இப்படியேநடந்தால் இனி உலகில் பொருத்தமற்ற மணங்கள்நடவாதென்று கூறுவேன்.

ராஜமாணிக்கம்.

சுயமரியாதை திருமணம் புரிந்து கொண்ட சின்னராமாயி பாக்கியநாதன் ஆகியவர்கள் எங்கள் போன்ற இளைஞர்உலகத்திற்குச்செய்த பெருந்தொண்டை வாலிபர்கள் ஒருநாளும் மறக்க முடியாது அவர்கள் நீண்டநாள் வாழஆசைப்படுகிறேன்.

சன்முகம்.

இக்கூட்டத்தில் பாராட்டப்படும் மணமக்கள் செய்த ஓர் காரியம் பல வாலிபர்களுக்கு ஊக்கமளித்திருக்கிறது, அவர்கள் மிக பாராட்டுதலுக்குரியவர்களும் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை இளைஞர்கள் தீர்த்து வைத்து வேண்டுவன செய்ய வேண்டியது கடமையாகும்.

தி. திரவியம்.

மணமக்கள் தங்கள் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டது போற்றக்கூடிய விஷயமாகும். அவர்களைநான்மிகப்பாராட்டுகிறேன். அர்த்தமில்லாமல் மணம் புரியும் வைதீகர்கள் இதை கவனித்தாவது இனி நடந்து கொள்ளட்டும். இக்கல்யாணத்திற்குக்காரணம் குடிஅரசு பேப்பர் என்று மணமகன்சொன்னார் ஆதலால் குடிஅரசு பத்திரிகையை எல்லோரும் வா[illegible]ழைத்து படிக்கவேண்டுகிறேன். பெண்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் குறைந்த சந்தா ரூ. 1—8—0 தான் தவறாது வாங்கி வாசிக்கவேண்டியது. மணமக்கள் நன்முக வாழ ஆசைப்படுகிறேன்.

ஞானப்பிரகாசம்.

இத்திருமணத்தம்பதிகளை நான்பாராட்டுகிறேன். இம்மாதிரிக்கல்யாணத்தை வைதீகர்கள் மஸ்வாதிக்கல்யாணம் என்று கூறுகிறார்கள். அவர்களுக்குப் புத்தி வருமாறு கண்டிக்க வேண்டும்.

ராமசுப்பிரமணியம்.

இத்தம்பதிகளைப் பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசியதோழர் ஞானப்பிரகாசம் அவர்கள் இக்கல்யாணத்தை வைதீகர்கள் மஸ்வாதிக்கல்யாணம் என்று கூறுகிறார்களென்று கூறினார். மஸ்வாதிக்கல்யாணமென்றால், என்ன? என்று ஒருவரிடம் நான்கேட்ட பொழுது "விபசாரக் கல்யாணம்" என்று கூறினார். நன்று உண்மையில் விபசாரத்தின் மூலம்வாரத்திற்கு 3, 4 குழந்தைகளை திருச்சி சாணியாங்குளத்தில் மட்டும் வைதீகர்களால் மணம் செய்யப்பட்டு விதவையான சகோதரிகள் தள்ளிவருகிறார்கள். இது போன்று குளம் ஏரி ஆறு, சாக்கடை, குப்பைத்தொட்டி, சாக்கடை ஆகியவற்றில் வைதீகர்கள் என்று சொல்லுவோர் தான் சட்டை செய்து வருகிறார்கள். இம்மாதிரியான அயோக்கிய விபசாரத்தனம் ஓர் வழக்கமாகவே வைதீகர்கள் கைக்கொண்டு விட்டார்கள். தாங்கள் செய்யும் அயோக்கியத்தனத்தை உண்மையாக நடக்கும் மக்களிடமும், பழிசுமத்தத் தொடங்கி விடுவார்களேயானால் இவர்களை எவ்வளவு பெரிய அயோக்கியர்கள் என்று கூறுவது. வைதீகர்கள் இப்பொழுது செய்து வரும் திருமணமுறை ஒரு அறிவாளியால் மதிக்க முடியாததாகும். கொஞ்சகாலமுன்பு கல்கத்தாவில்ஒரு வைதீகர் தம்பெண்ணை ஒரு ஆட்டுக்கிடாய்க்கு மணம்செய்து கொடுத்த செய்தி நீங்கள் பத்திரிகைவாயிலாக அறிந்திருப்பீர்கள். இன்னும் சிலர் அரசமரத்திற்கும், வேப்பமரத்திற்கும் மணம் செய்கிறார்கள். இம்மாதிரி அறிவுக்குப்பொருத்தமில்லாமல் எந்த சுயமரியாதைக்காரரும் செய்யவில்லை. சுயமரியாதைக்காரர்கள் இதுவரை செய்து வந்த ஒவ்வொரு மணத்திற்கும் தகுந்த காரணங்களுண்டு. அம்முறையில் இங்கு இருக்கும் தம்பதிகளும் ஆவர்கள். என்பதை எனக்கு முன்ப

பேசிய நண்பர்கள் உங்களுக்கு எடுத்துச்சொல்லிவிட்டார்கள். மணமக்களைப் பாராட்டுகிறேன்.

சமதர்மரங்கநாதம்.

இந்த தம்பதிகள் விவாகம் செய்து கொண்டது மிக சிலாக்கியமாகும். இதைப்பாராட்ட வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

எ. சாமுவேல்.

இந்த மணமக்கள் நீண்டகாலம் வாழ ஆசைப்படுகிறேன். அவர்கள் செய்த காரியம் பலருக்கு சந்தோஷத்தைக்கொடுக்கக் கூடியதாகும்.

தலைவர் முடிவுரை கூறியதும் வந்தனம் கூறப்பட்டது. இரவு 9-30 மணிக்குக்கூட்டம் முடிவுற்றது. இரவு விருந்து பாலக்கரை ரயில்வே கார்டு தோழர் ஆரோக்கியசாமி இல்லத்தில் தம்பதிகள் உள்பட சுமார் 40-ஆண் பெண்களுக்கு ஓர் விருந்து நடைபெற்றது. மறுநாள் பகல்வண்டியில் மணமக்களிருவரும் திண்டுக்கல்லுக்குப் பிரயாணமானார்கள். நண்பர்கள் ஸ்டேஷன் சேன்று வழியனுப்பினார்கள்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதற்கு முன் "டுமா" சபையானது ஒரு பக்கம் ஜாரினுடைய எதேச்சாதிகாரத்தைத் தட்ட முடியாமலும் மற்றொரு பக்கம் பொது ஜனங்களின் அராஜகத்தை தடுக்க முடியாமலும் திணறிக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் கலகம் செய்வார்களானால் அதையடக்க அதற்கு வலிமையில்லை. பொது ஜனங்களோசட்டபூர்வமான நடவடிக்கைகள் எல்லாம் செய்து பார்த்து சலித்துப் போய் விட்டார்கள். சில ராஜாங்கத்தில் ஒரு சிறு புரட்சியாவது செய்துதீர வேண்டு மென்று விரும்பினார்கள். அதாவது ஜார் குடும்பத்தாரையும் மந்திரிகளையும் பிரயாணம்செய்யும் பொழுது பிடித்து இம்சித்து பதவியை இழக்கச் செய்து, புதிய ஜாருக்குப் பட்டங்கட்டி புதிய "டுமா" (பார்லிமெண்ட்) ஒன்று அமைக்க வேண்டு மென்பதே யாகும். அது நிறைவேறாமல் போய் விட்டது. இதன் பிறகு தான் தொழிலாளர்களால் செய்யப் பட்ட போல்ஷ்விக் புரட்சி என்பது ஏற்பட்டது.

மார்ச்சு மாதம் 8-ம்தேதி ருஷ்யத் தலைநகரான "பீட்ரோகிராட்" நகரத்தின் லட்சத்து முப்பதினாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அத்தினம் ஸ்திரீகள் தினமாகக் கொண்டாடப்பட்டு ஊர்வலமும் நடத்தப்பட்டது. போலீசார் இதில் தலையிடவில்லை. மறுநாள் வேலை நிறுத்தங்கள் பரவி விட்டன. சர்வகலாசாலை மாணவர்களும் வெளியேறிவிட்டார். தெருவில் சென்ற கூட்டத்தார் எல்லோரும் "உணவு உணவு" என்று கூறிக்கொண்டே சென்றனர். அவர்கள் எல்லோரும் யுத்தத்தையும், யதேச்சாதிகாரத்தையும் கண்டித்துப்பேசினார்கள்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞாவஸ்தையை வெட்கியம் செய்யாமல் உயிர் துறந்த கதைகள் பலவுண்டு.

வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதோர் துன்பத்தை நீக்க இன்சால்வெண்டு அல்லது பேங்க்ரப்ட்-என்று சொல்லுகிற வழி ஒன்று உண்டு. அதாவது அரசாங்கத்தாரிடம் கணக்குக்கொடுத்து விடுவது. ஆனால் இம்முறை கண்ணியமுடையதாக இல்லை. இன்சால்வெண்டு கொடுத்தவரை பொது மக்களும், அரசாங்கமும் கண்ணியமற்றவராகவே மதிக்கின்றனர். பல சுதந்திரங்கள் அவரிட மிருந்து பிடுங்கப் பெறுகின்றன. இல்லாதவன் சாகட்டும் என்ற சொல்லாமல் கொல்லும் கொலை தீர்ப்பென்றே இன்சால்வெண்டு முறையை அறிஞர் கருதுகின்றனர்.

பொய்யர்களையும், திருடர்களையும் பயங்கொள்ளிப் பேடிகளையும் நடத்துகிற மாதிரியில்தான் உலகம் இன்சால்வெண்டு கொடுத்தவனை நடத்துகிறது தனி மனிதருக்குக்கடன் வாங்க அனுமதிகொடுக்கக் கூடாது. அப்படிக்கொடுத்தால் கண்ணியமுள்ளோரை அவமானப்படுத்த இடம் இருக்கக்கூடாது. இவைகள் இரண்டிலும் முதலாவதான கடன் வாங்கும் முறையை ஒழித்தலே சுலபசாத்தியமாகலாம். ஆதலின் மக்களுக்குத்துன்பம் தராத முறையில் லேவாதேவித் தொழில் இனிச்சீர்திருத்தப் பெறவேண்டிய அவசரமும், அவசியமும் சேர்ந்து விட்டது.

(தொடரும்)

கோவில்பட்டி சுயமரியாதைச்சங்கம் உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.

6-4-33 மாலையில் தோழர் கே. பி. பாக்கியம் அவர்களின் "சமதர்ம லாட்ஜில்" சுயமரியாதைச் சங்கக் காரியக் கூட்டம் நடைபெற்றது. சுயமரியாதைச் சங்கத்துக்கு நிரந்தரக் காரியதரிசியாக தோழர் கே. பி. பாக்கியத்தை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

தோழர் எஸ். டி. இராமசாமியைச் சங்கத்தின் பொக்கிஷதாராகவும் கீழ்கண்ட தோழர்களைச் சங்க நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் வெள்ளைச்சாமி, தேவதாஸ், மாரியப்பன், அழகர்சாமி, பி. சுப்பிரமணியம், இராமகிருஷ்ணன், திருப்பதி, சிதம்பரம் பின்னர் தோழர் கே. பி. பாக்கியம் தலைமையில் நடந்த கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

கோவில்பட்டி சுயமரியாதைச் சங்கத்தின் அங்கத்தினர்கள் மாதம் ஒன்றுக்கு அணா நான்கு சந்தாவாகச் செலுத்துதல்.

தீர்மானங்களுக்குப் பின்னர் தோழர் கே. பி. பாக்கியம் அவர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு தினசரி பத்திரிக்கை இல்லாததைப்பற்றியும், சு. மா. இயக்கத்தின் உயரியத் தத்துவங்களைப்பற்றியும் தெளிவாகப் பேசினர்.

(ஒரு நிருபர்)

குளூர்.

சுயமரியாதை இளைஞர் சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டம் 3-1-33ந்தேதி மாலை 7மணிக்கு இவ்வூர் மாரியம்மன் கோவிலுக்குமுன்னுள்ள மைதானத்தில், இவ்வூர் யூனியன் கௌன்சிலரும், இச்சங்கத்தின் தலைவருமான, தோழர் எஸ். எல். எஸ். மணியம் தலைமையில் கூடியது. தலைவர் முன்னுரையில், தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களின் பொது நலசேவையைக் குறித்துப்பாராட்டிப் பேசிவிட்டு, பார்ப்பனப்பத்திரிகைகளாகிய, சுதந்திரச்சங்கு ஆனந்தவிடகன் முதலியவைகளின் குறும்புப்பிரசாரத்தைக் கண்டித்துப்பேசினபின், அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதைப்பாராட்டியும், காரைக்குடி போலீசார் தோழர்கள் ஜீவானந்தம், ராமசுப்பையா கணபதி ஆகியவர்களை அடித்ததற்குக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேறியது. பின்னவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

சிதம்பரம் தாலூகா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

தோழர்களே!

சென்ற முறை சிதம்பரம்தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடானது பரதூரில் நடந்தேறிற்று. அச்சமயம் பரதூர், பொன்னெங்கோயில் கீழ்நத்தம் புவனகிரி, வீரசோழகன், வெள்ளியக்குடி, பெண்ணாடம் சிதம்பரம், நகராமலை, இடையம் பால்சொரி, விளாகம், சித்தலூர் ஆகிய இடங்களிலுள்ள தோழர்கள் அதற்கான ஆதரவுதந்தது மகிழ்ச்சிக்குரியதாகும். தென்னாட்டு மக்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள சுயமரியாதைஉலகில் நமதுதாலூகாவும் இடம் பெற்றுச் சிறப்புறுகின்றது. இப்போது ஷை இரண்டாவது சுயமரியாதை மகாநாடு நடைபெறவேண்டியதிருக்கிறது. இம் மகாநாட்டிற்கு தோழர் ராமசாமியும், இயக்க அபிமானிகளாகிய சென்னை அரசாங்க முதன் மந்திரியார் தோழர் பொபிலிஅரசர் முதலிய பிரமுகர்களும் விஜயம் செய்விக்க ஏற்பாடு செய்வதையும் குறிப்பிடுகிறோம்.

மகாநாடு மேமாதவாக்கில் நடைபெறும். இயக்க அபிமானிகளும், தோழர்களும் இயன்ற ஆதரவளிக்க வேண்டுகிறோம்.

பிரசிடெண்டு, P. D. சிவநேசன்.
செகரெட்டரி, P. S. ரெங்கநாதன்
பரதூர் வாலிப சுயமரியாதைச் சங்கம், 18-3-33.

மணமகன் தேவை.

அகம்படியகுலத்துதித்தவரும், 3 வது வகுப்புவரை படித்தவரும், கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவரும், நல்ல அழகும், தேக சுகத்துடனும் இருக்கக்கூடிய 14 வயதுள்ள ஓர் கன்னிகைக்கு மணமகன் தேவை.

மணமகன்:—மேற்படி வகுப்பில் தோன்றியவரும், கல்விகற்று உத்தியோகம், வியாபாரம் இவைகளில் மீ 1 க்கு ரூ 30 க்கு குறையாத வருமான முடையவராயும், 25 வயதிற்கு மேற்படாதவராகவும், அழகும் தேகசுகத்துடனும் இருக்கக்கூடியவராகவும் இருக்கவேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 0—1—3 ஸ்டாம்புடன் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

ச. ம. சி. பரமசிவம்
காரியதரிசி.
தமிழ்நாடு புரோகித மறுப்பு சங்கம்,
22, பாளையம் பஜார், உறையூர்.
திருச்சி.

மணமகள் தேவை.

மருத்துவவகுப்பில் தோன்றியவரும், 23 வயதை உடையவரும் மணமகாதவரும், வியாபாரத்தில் மாதம் ரூ. 50 சம்பாத்திய முடையவரும் சில ஆயிரம் ரூபாய்க்கட்கு பூஸ்த்தி உடையவரும், நற்குணமும் நல்ல அழகும் உள்ள ஒருவருக்கு மணமகன் தேவை.

மணமகன்:—மேற்படி வகுப்பில் தோன்றியவராகவும், மணமகாதவராகவும், 18 வயதிற்கு மேற்படாதவராகவும், நற்குணம் நல்ல அழகும் உடையவராகவும், படிக்கத்தெரிந்தவராகவும் இருக்கவேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் 0—1—0 தபால் தலைகளுடன கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ச. ம. சி. பரமசிவம்.
காரியதரிசி.
தமிழ்நாடு புரோகித மறுப்பு சங்கம்,
22, பாளையம் பஜார் உறையூர்,
திருச்சி.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ள சந்தோஷத்தைத்தெரிவித்துக் கொள்ளவேண்டும். பேரறிவாளர்கள் பலர் அநேக அரும் பெரும் விஷயங்களைப்பற்றி வாசாம கோசரமாய்ப் பிரசங்கம் செய்வார்கள். இன்றைக்கும் நாளைக்கும் இங்கு நடக்கும் விஷயங்களைக் கண்ணும் கருத்தோடு கவனித்து, கலந்தாலோசித்து மகா நாட்டை சிறப்பிக்கும்படி வரவேற்புக்கழகத்தின் சார்பாக, உங்கள் யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

23-3-33 தேதி வியாழக்கிழமை தோழர் ஆர். கோவிந்தன் அவர்கள் தந்தையாருக்கு திதி ஆகையால் அதை முன்னிட்டு ஷை தோழர் யாதொரு சடங்குகளின்றி சுயமரியாதை சீர்திருத்த முறையில் சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் காரியாலயத்தில் ஓர் சமபந்திபோஜனம் நடப்பித்தார். இதர தோழர்களும் மொத்தத்தில் இருபதுபேர் கலந்து கொண்டார்கள் என ஒருநிருபர் எழுதுகிறார்.

மதிப்புரை.

"சோவியத்ருஷியா"

உத்தம பாளையம் பாரத புத்தகாலயத்தாரால் பிரசுரிக்கப்பட்ட சோவியத்ருஷியா" என்னும்புத்தகம் ஒன்றுநமதுபார்வைக்கு அனுப்பப்பட்டதை படித்துப்பார்த்தோம். இது தோழர் ஜவார்லால் நேரு அவர்கள் 1927 ல் ருஷியா சென்று பார்த்துவிட்டு வந்தபிறகு அங்குள்ள நிலைமைகளையும், தோற்றங்களையும் தான் அறிந்த படி ஆங்கிலத்தில் வெளியிட்ட வியாசங்களைத் தொகுத்து புத்தக ரூபமாக ஆங்கிலத்தில் வெளிவந்ததை தமிழில், மொழி பெயர்த்து வெளியிட்டதாகும். இதில் ருஷியாவானது சோவியத் ஆட்சியில் 1927 ம் வருஷத்தில் எப்படி இருந்தது என்பதைப் பற்றிய அனேக விஷயங்கள் கண்ணாடி போல் எடுத்துக்காட்டுகின்றது. அதாவது இப்புத்தகம் ருஷியதேசபொது தோற்றம், சோவியத் ஆட்சியில் விவசாயம், கிரிமினல் சட்டம், சிறைச்சாலை நிலை, சிறுவகுப்பாரின் பிரச்சினை, பெண்களும் மணமும், ருஷியாவும், இந்தியாவும் என்பவை முதலிய 17 தலைப்புப்பிரிவுகளாகப் பிரித்து எளிதில்விளங்க எழுதப்பட்டிருக்கிறது. ருஷியாவை அறிய வேண்டியவர்களுக்கும், சமதர்ம உணர்ச்சிஉள்ளவர்களுக்கும்இப் புத்தகம்மிகவும் இன்றியமையாதது. தோழர். பி. வரதராஜலு அவர்களின் முகவுரைபெற்று சுமார் 200 பக்கங்களுக்கு மேற்பட்டும், சுமார் 20 படங்களுடனும்விளங்குவதாகும்.

இதன் விலை ரூ 1—4—0 விலாசம் பாரதி புத்தகாலயம் உத்தம பாளையம். (மதுரை ஜில்லா)

எதிர்பாருங்கள்!

அடுத்த வாரம் (8-4-33) ல் தோழர் எச். ஜி. லஸ்கி போல்ஷ்விஷம் அல்லது பொதுவுடமை என்ற கட்டுரை வெளிவரும் எதிர்பாருங்கள். (ப - ர்.)

இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, கோசம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வ. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

ஏ. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: — விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

43, கச்சேரி வீதி, ஈரோடு.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒதுங்கி நிற்க, இங்கு கொள்ளையடித்தவன் கூட கோபுரமான வீடுகளைக்கட்டி தாசிவேசிகளுடன் சல்லாப வாழ்க்கை நடத்துவதை தின்றுகொழுத்து அசைக்க முடியாத அச்சுத்தேராய் நகருவதைப் பார்த்து எத்தனை நாளைக்கு பொறுத்துக்கொண்டிருப்பது? இனி எந்தக் காலத்தில் நம்மக்களுக்கு புத்திவரப் போகின்றது? இனி எத்தனை நாளைக்குத்தான் நம்மக்களது உணர்ச்சியைத்தட்டி எழுப்பாமல் ஊறுகாய் மக்குவதுபோல் மக்கவிட்டுவருவது? என்றுதான் சுயமரியாதை இயக்கம் கேட்கின்றது — சொல்லுகின்றது. இதற்காக அதன்மீது ஆத்திரப்படுவது மேலும் அவர்கள் தன்னலப் புத்தியையே காட்டுவதாகும்.

மாற்றம்.

தோழர்களே! நாம் நமது குறைபாடுகளை எடுத்தாராய்ந்து மாற்றிக்கொள்ள விரும்பினால் அது பலருக்கு மிக கசப்பாயிருக்கின்றது. "பழமையைமாற்றக்கூடாதாம்" இவ்வாறு கூறுவதில் அர்த்தமேயில்லை. சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நாம் செய்துவரும் ஒவ்வொரு காரியமும் மாற்றமாகவே காணப்படுகின்றது. ஆதியில் நாம் பார்ப்பானை நீக்கித் திருமணம் செய்ய முயற்சித்தது, செய்தது, நாட்டில் ஒரு பெரும்மாறுதலாகவேயிருந்தது. இன்று அது சர்வசாதாரணமாகமாறிவிட்டதை எல்லோரும் அறிவார்கள். மூன்றுநாள், ஐந்துநாள் கல்யாணத்தை நிறுத்தி ஒருநாளாகமாற்றி ஆடம்பரத்தை குறைக்கச் சொன்னது அக்காலத்தில் மக்களுக்கு நூதனமாகவே காணப்பட்டதென்றாலும் இப்போது அதுதான் நடைமுறையில் கையாளப்படுவதோடு 3 நாள் கல்யாணம் என்றபேச்சே மறக்கப்பட்டாய்விட்டது. ஏன்? உலகமே நாளுக்கு நாள் மாற்றத்தில் தான் போய்க்கொண்டிருக்கின்றது. மாற்றம் மக்களுக்கு இன்றியமையாதது. சு-ம இயக்கத்தின் 7, 8 ஆண்டுகளைய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாலே அதன் கொள்கைகள் ஒன்றுக்கொன்று புதிதாகி அவ்வப்போது மக்களுக்கு மிக விநோதமாக காணப்பட்டு லகுவில் கையாள முடியாதென கருதப்பட்டதானது. தற்போது அதே மக்களால் சாதாரணமாக அநுஷ்டிக்கப்படுவது தெற்றென விளங்கும். சுருக்கமாக ஒன்று கூறுகின்றேன். நம் பெண்களுக்கு தாலியைவிட முக்கிய பொருள் வேறு ஒன்றும் இல்லையெனப்படுவது யாவரும் அறிந்ததே? அவ்வளவு மகத்துவம் பொருந்திய தாலியானது தற்போது பல மணங்களில் கட்டாமல் கைவிடப்பட்டாய்விட்டது. சிலர் சில தொந்தரவினிமித்தம் கையாண்டும் சிலர் காரியம் முடிந்தபின் வயது சென்ற மூட்டைப் பூச்சிகளின் பிடுங்கல் பொறுக்கமுடியாது கையாண்டும், முடிவில் எல்லாம் கூட அதன் அளவு மீறிய மகத்துவத்தில் நம்பிக்கையில்லாமலே செய்துவிட்டது. இவ்வாறே ஒவ்வொன்றையும் எடுத்தால் பேச்சு நீளமாகுமென்றாலுங்கூட உண்மை விளங்காமற்போகாது.

பெண்மக்களும், நமதுநாடும்.

நமது நாட்டில் பெண்மக்கள் அநுபவிக்கும் ஈடில்லா 'இன்பங்களை'ப்பற்றிப்பேசுவதானால் இப்போது நேரம் போதாது. எனினும் சுருக்கமாக சில கூறுகிறேன். பார்ப்பனர்கள் மற்றவர்களை அடக்கியாள்வதற்கு எத்தகைய ஆயுதங்களைக் கையாண்டார்களோ அதேபோல்தான் ஆண்மக்களும், பெண்மக்களை அடக்கியாள ஆயுதங்களைக்கையாண்டிருக்கிறார்கள். பெண்ணுலகை ஆணுலகம் அடக்கி வைத்திருக்கும் தன்மையானது மகாகொடியதாகும். எங்குதப்பக்கத்திலும் அடிமை! அடிமை!! என்ற ஒலியும், ஒதுங்கு! ஒதுங்கு!! என்ற ஓசையும், கேட்கப்படுவதைத் தவிர வேறு என்ன இருக்கின்றதென்பதை நீங்களே சற்று ஆலோசியுங்கள். பெண்மக்கள் இன்று எதற்கு உபயோகமாயிருந்து வருகின்றார்களென்பதையும் நீங்கள் சிறிது சிந்தித்துப்பார்த்தால் அவசியம் அடுப்புச்சாம்பலில் புதைந்து கிடக்கவும் கணவன் ஆக்கினையிடுவதையெல்லாம் நிறைவேற்றவும் வருடத்திற்கொரு பிள்ளை பெறவும், பலவிதத்திலும் வேதனை, பிடுங்கல், கஷ்டம் அடைவதற்கு தவிர வேறு எதற்காவது உபயோகமுள்ளவர்களாக இன்றுஇருக்கிறார்களா? உபயோகப்படுபவர்களாக நம்முடைய மதம் ஆக்கி வைத்திருக்கின்றதா? என்பதை ஆலோசியுங்கள். அடுப்பூதவும் ஆணுக்கு அடிமையாயிருக்கவும், தான் பெண்மக்கள் படைக்கப்பட்டிருக்கிறார்களென சுயநல ஆண்களும் அறியாத சில பெண்களும் கருதியிருக்கின்றார்கள். "இந்தியப்பெண்களுக்கு இடம் சப்ரமஞ்சக்கட்டிலும்நளபாக அடுப்பும், பிரசவ ஆஸ்பத்திரியுமா?" என்று "குடிஅரசு" கேட்ட கேள்விக்கு சரியாய்த்தான் நம் நாட்டுப்பெண்கள் வாழ்க்கை நடந்துவருகின்றது. இன்று நம்நாட்டுப்பெண்களின் நிலைமையென்னவென்றால் கண்ணிருந்தும், கண்ணில்லாக்குருடர்களாகவும், காதிருந்தும் காதில்லா செவிடர்கள்போலவும், உண்மையை உணர உள்ளமிருந்தும்உணராதாராகவும்மற்றவர்களால் இயக்கப்படுகின்ற மரப்பாவைகள் அனைய இருக்கின்றார்கள். $17\frac{1}{4}$ கோடி பெண்மக்களில் ஒருவராவது சுதந்தர வாழ்க்கை நடத்துகிறார்களாவெனக் கேட்கின்றேன். குழந்தைகள் கையில் அகப்பட்ட விளையாட்டுச்சாமான்களுக்கும் ஆண்கள் கையில் அகப்பட்ட பெண்களுக்கும் எவ்விதத்திலும் வித்தியாசமில்லையென்றுதான் முடிவுகட்டுகிறேன். பெண்கள் ஆண்களின் விளையாட்டுச்சாமான்களாயிருப்பதற்கு மத ஆதாரம், சாத்திர சம்மதம், கடவுள் சம்மதம், புராண சம்மதம், எனவே மேற்கூறப்பட்ட நான்கையும் அதன் பரிவாரங்களையும் சந்நிக்குக்கொணர்ந்து சாயந்தை வெளுக்கவைத்து, சாம்பலாக்கி, சமுத்திரத்தில் சேர்த்தால்தான் பெண்மக்கள் விடுதலையென்று பேசுவதில் கொஞ்சமாவது பலனுண்டு என நினைக்கிறேன். சரிபகுதியினராகிய பெண்மக்கள் இருகண்களில் ஒரு கண்ணுக்கு ஒப்பான சமூகம், மிருகத்திலும் கேவலமாக மதிக்கப்பட்டு அறியாமையிலும், அடிமைத்தனத்திலும், அமிழ்ந்து நின்றால் இந்தியநாடு எவ்விதத்தில் முன்னேற்றமடையமுடியும் என்று கேட்கின்றேன். இந்தியப் பெண்ணுலகம் அடிமையுற்றிருக்கும்வரை இந்தியநாடும் அடிமை நாடேயென்பதில் ஆட்சேபணையில்லை. இனி பெண்களைப்பற்றிய கதைகளையும், பழமொழிகளையும், அபிப்பிராயம் கூறிய ஞானிகள் என்பவர்களையும் எடுத்துகொண்டால் ரொம்பவும் மோசம். ஒரு வார்த்தையில் கூறவேண்டுமானால் அஞ்ஞானிகள் வேதாந்திகள் என்று சொல்லப்படுபவர்கள் அயோக்கியர்களாகவே விளங்குகின்றார்கள். பெண்கள் நிழல்கூட தங்கள் மேல் படக்கூடாதென்றும், இவர்கள் மோட்சமடைவதற்கு பெண்கள் தான் பெருத்த முட்டுக்கட்டைகளாயிருக்கின்றார்களென்றும், அவர்கள் உறவை அடியோடு ஒழிப்பதுதான் மோட்சத்திற்கு ஒரே நேர்வழியென்றும், பேசிய இம்மேதாவிகள் கொஞ்சமாவது யோக்கியமாகவும் ஒழுங்காகவும் நடந்துகொண்டார்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். இப்பரமயோக்கியர்கள் கண்ணுக்குப் பெண்மக்கள் பேய்களாகவும், பிசாசுகளாகவும் தோன்றுவதாகக் கூறப்படுவது விந்தையேயன்றி வேறில்லை ஆம்! தட்டிப்பேச ஆளில்லையானால் தம்பி சண்டப்பிரசண்டனே!

தோழர்களே! எதற்காக நான்இதைப் பற்றிப்பேசுகின்றேனென்றால் இப்பேர்க்கொத்த பெரியார்களெனப் பட்டவர்களின் மூடமொழிகள், கதைகள், நூல்கள், இவைகளைக் கொண்டுதான் இன்று பெண்மக்கள் அதிகமாக அடக்கப்பட்டு வருகின்றனர். எனவே எல்லாப்புரட்டுகளும் வெளியாவதுபோல் இந்தப் புரட்டும் வெளியாகி பெண்மக்கள் பெருமை அடையவேண்டுமென்பதுதான் எனது ஆசை. நிற்க நம்நாட்டில் எடுத்ததற்கெல்லாம் அடுப்பூதும் பெண்கள்! அடுப்பூதும் பெண்கள் என்று இகழ்ந்து ஒதுக்கப்படுவது எப்படியிருக்கிறதென்றால் தொழிலாள மக்கள் பாடுபட்டு ஓய்வின்றி உழைத்து முடிவில் பலனையெல்லாம் முதலாளிமார்களே அநுபவித்து உழைப்பாளர்களை மேலும் நசுக்கும்நன்றிகெட்டதன்மையையே ஒத்திருக்கின்றது.

சுயநலமும், அடக்குமுறையும்

பெண்மக்களை அடிமைகளென்றும், தாழ்ந்தவர்களென்றும் ஆற்றலற்றவர்களென்றும் கூறுதலானது சுயநலமும் அடக்குமுறையுமேயாகும். பெண்கள் கல்வி கற்று பகுத்தறிவு பெற்றுவிட்டால் ஆண்களின் சுயநல ஆதிக்கத்திற்கு அடிபணியமாட்டார்களென்றுதான் நல்லபாம்பைப் பிடித்தவுடன் விஷப்பல்லை முதலில் பிடுங்குவதுபோல் பெண்கள் படிக்கக்கூடாதென்று சொல்லிவைத்தார்கள். படிக்கக்கூடாதென்பதோடுமட்டுமல்ல—ஒன்றுக்குமே லாயக்கில்லை—காலில் மிதியடிபோட்டுக்கொள்ளவும் உரிமையில்லை. என்ன சுயநலம்! எவ்வளவு வன்னெஞ்சம்!

இனி "கற்பு" என்பதைப் பற்றி எடுத்துக்கொண்டாலோ குறைந்தது அதற்கு இரண்டுமணி நேரமாவது வேண்டும். பெண்களுக்கு மட்டும்தான் கற்பு வேண்டும், ஆண்களுக்கு அதைப்பற்றிய பேச்சே கிடையாது என்றால் அக்கற்பிறகு அடிமைத்தனத்தை வளர்ப்பது என்றுதான் பொருள். கற்புள்ள பெண்களால் ஆகாத காரியம் ஒன்றுமில்லையென்பதை எடுத்துக்காட்ட கதைகள் பல இருக்கின்றன. அதைப்பற்றி ஆராய இப்பொழுது நேரமில்லை. ஆனால் ஒன்று, இன்று நம் நாட்டில் பெண்மக்களும் ஏதோ சிறிதளவாவது கல்வி வாசனை உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்களென்றால், கல்வி வாசனை உள்ளவர்களாகக் கப்பெற்றோர்கள் பிரியப்படுகின்றார்களென்றால் அது இப்பேர்க்கொத்த நூல்களைப்படித்து மேலும் அடிமைத்தனத்தையும் குருட்டெண்ணத்தையும் வலுப்படுத்தி வளர்ப்பதற்கேயல்லாமல் மற்றபடி அதனால் வேறு எந்த சுதந்திரமோ சுயஞானமோ அடையத்தக்க பெரிய நோக்கமும் ஏற்பட்டு விடவில்லையென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முடிவாக.

தோழர்களே! இப்பேர்க்கொத்த கொடுமைகள் ஒழிந்தாலல்லது நமது நாடு நலமடையப்போவதில்லை. நாம் முன்னேறவேண்டுமானால் உலகவாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டுமானால் நமது குறைபாடு ஒவ்வொன்றையும் கவனித்துப்பார்த்து நாமே நீக்கிக்கொள்ளவேண்டியதுதான். இதில் என்ன வந்தாலும் சரி! ஒரு கை பார்த்துவிடுவதென்ற முடிவுகட்டி முன்னிற்கவேண்டும். "அஞ்சாமை" என்பதே நமது எதிரிகளை புறங்காட்டி ஓடச்செய்யும் அருமையான ஆயுதம். தோழர்களே! நல்லனயாவும் தழைக்க, அல்லனயாவையும் அழிக்க, இன்றே ஒன்று சேருங்கள் என்பதோடு மீண்டும் உங்கட்கு என் செஞ்சுகந்த வந்தனத்தை செலுத்தி எங்கும் சுயமரியாதை நாட்டுவோம்! எப்பக்கமும் சமதர்மத்தென்றலை வீசுவோம்! எல்லோரும் இன்புற்றிருக்க நாடுவோம்!! என இம்மகாநாட்டை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்து வைக்கின்றேன்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தெரிந்துகொண்டவளவில் மதம் நன்மைத்தன்னல யிக்கோராக்குகிறது. ஏனெனில், ஏதுமறியா குருக்கள் குழாங்கள்நமது ஆன்மாவைப்பற்றியும் அதன் விமோசனத்தைக் குறித்தும் தான் சிந்திக்குமாறு கூறுகின்றனவேயன்றி, பிறருடைய ஆன்மாக்களைப் பற்றியோ, அவைகளின் விமோசனங்களைப்பற்றியோ, சிந்திக்கும்படி கூறவில்லை.''

சுயமரியாதை இயக்கம் முன்னேற்றமெய்திக் கொண்டிருப்பதைக்குறித்து இரண்டாவது மாகாண மகாநாட்டிற்குத் தலைமைவகித்த தோழர். எம். ஆர். ஜெயகர் சுயமரியாதை இயக்கத்தில் சாதிபேதமென்னும் உணர்ச்சி அறவே ஒழிந்துவிட்டதென்றும், மதக்குழுவினரும் காங்கிரசும் எய்தமுடியாத விடுதலையையும், இன்பத்தையும் இந்த இயக்கம் அளிக்குமென்றும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். அவருடைய சொற்பொழிவில் நாஸ்திகத்தைக் குறித்துக் குறிப்பிடுகிறார். இனி கூட்டங்களில் கடவுளுக்கு வணக்கமும், மன்னருக்கு வாழ்த்தும் கூறக்கூடாதென்று அம்மகாநாட்டிற்கூடியிருந்த இளைஞர்கள் பெரும் எதிர்ப்புகளுக்கிடையே இத்தேசச் சரித்திரத்திலேயே முதன்முதலாகத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். பெண்கள் முன்னேற்றம் குறித்தும், தீண்டாமை யொழிப்பைக் குறித்தும் வெகுவாக வற்புறுத்தினார்கள். அப்போது நடைபெற்ற பெண்கள் மகாநாட்டுத் தலைவியார் தோழர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் ஆற்றிய தொண்டு புகழுக்குறியதே.

விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது மாகாண மகாநாட்டில் இந்த இயக்கக்கொள்கை சம்மந்தமாக ஏற்பட்டிருந்த பிளவுகள் உருப்பெற்றன. மகாநாட்டுத்தலைவர் தோழர் ஆர். கே. ஷண்முகம் தலைமையுரையிலிருந்து அம்மகாநாட்டின் உணர்ச்சி எப்படியிருந்ததெனத் தெளிவாகும். அவர் கூறியதாவது:—''நமது அயலாரோடு நாம் ஒத்துவாழ்வதற்கு மதம் தடையாயிருக்குமானால், அம் மதத்தைத்திருத்தவேண்டும். அல்லது அழிக்கவேண்டும்''. தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அம்மகாநாட்டில் கீழ்கண்ட தீர்மானத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றினார். ''எல்லா வழக்க பழக்கங்களும் ஸ்தாபனங்களும் மக்கள் வளர்ச்சியைக் குலைத்து மக்களுக்குள் சகோதர உணர்ச்சியைத தடைப்படுத்தி விட்டனவாதலால், எல்லா மதங்களும் ஒழியவேண்டுமென்பதே சுயமரியாதை இயக்கக்கொள்கைகளின் உணர்ச்சிக்கும் வெற்றிக்கும் அறிகுறியாகுமென இம்மகாநாடுதீர்மானிக்கிறது.' மதச் சீர்திருத்தம் என்னும் பிரச்னைக்கே இடமில்லை. பலவகை மதங்களும் ஒழிந்தால்தான் மக்கள் உன்னதமான சகோதர உணர்ச்சி பெறக்கூடுமெனக் கருதினர்கள். இங்ஙனம் சுயமரியாதை இயக்கம் வகுப்பு நலங்களையும் மதத்தின் பெருமையையும் கடந்து நின்றது. இவ்வாறாக, பலவகை மதங்களிலும் வகுப்புகளிலும் உள்ள குறைபாடுகள் வெட்டவெளிச்சமாயின. கெட்ட எண்ணத்துடனின்றி, மக்கள் நலன் காரணமாக அவைகள் அழியவேண்டுமென்னும் நன்னோக்கங்கொண்டேதான் அவை வெளிப்படுத்தப்பட்டன.

இந்த வேலை ஆரம்பமாகு முன்னதாகவே சுயமரியாதை இயக்கம் ஆரம்பக்கர்த்தர்கள் தம் கடமை இன்னது என்பதாகத் தெளிவாக உணர்ந்திருந்தனர். மதம் காரணமாகச் சமூகங்களெல்லாம் தீநெறிப்பற்றியிருக்கக்கண்டார்கள். எனவே மதம் என்ற முறையே ஒழியவேண்டுமெனக்கொண்டார்கள். மதத்தைப் புனிதப்படுத்துங்கருத்துடன் அதன் மேற்பூச்சைமட்டும் மாற்றியமைப்பதனால், சமூகத்திற்கு விமோசனமில்லை.

மதம் என்ற அமைப்பே தவிடுபொடியாக வேண்டும். அந்தத் தூசியினின்றி புதியஆக்கமொன்று தோன்றவேண்டும். எனவே பொதுவாக மதம் எதுவாயிருப்பினும், வேதமதமாயினும் முஸ்லீம் மதமாயினும், கிருஸ்து மதமாயினும், அவைகளை அழிக்கவேண்டியதே நோக்கமாகச் சுயமரியாதைக்காரர்கள், கொண்டிருக்கின்றனர். சுயமரியாதை கொள்கை எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் புனிதமானதென்றோ ஒன்றைவிட ஒன்று மேலானதென்றோ! கொள்ளவில்லை. விருதுநகர்மகாநாட்டுத்தீர்மானத்தில் இந்தத்தத்துவந்தான் உருப்பெற்றிருக்கிறது. இந்த முடிவை, பல ஜில்லாக்களில் கூடிய அநேக மகாநாடுகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன. இந்தத்தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டுதான் சுயமரியாதை இயக்க நிர்மாணம் முழுதும் அமைந்திருக்கிறது.

தோழர்களே! சுயமரியாதை இயக்கச் சரித்திரத்தைக்குறித்தும், பூர்வாங்க வேலைத்திட்டத்தைக்குறித்தும், கொள்கைகளைக் குறித்தும் போதுமானவரை உங்களுக்கு நான் கூறினேன், தேசியபுனருத்தாரணப் பெருஞ்சிக்கலில்சமுதாயத்துறையை மட்டும் பற்றிக் கருத்துக்கொள்ளுவதுதான் இந்த இயக்கத்தின் நோக்கமென்று ஏற்கனவே கூறினேன். அரசியல் கொள்கை எதையும் வகுத்துக்கொள்ளும் நோக்கம் கிடையாது. ஆனால் இச்சங்கம் ஆற்றமுற்பட்ட பணியை உறத்தோடும், தெளிவாகவும் பூரணமாகவும் செய்தது. சமாதானங்களைக்கொண்டு அது ஒரு போதும் திருப்தி யடைந்தது கிடையாது. இப்போது நாட்டில் பெரும்நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. வேண்டுமென்றோ; அறியாமலோ, உள்நாட்டு விவகாரங்களின் போக்கும் இந்நெருக்கடி விரைவில் முதிரும்படி செய்வனவாயிருக்கின்றன. இந்த நிலையிலே, உள்நாட்டுக் கலகங்களும், இரத்தப்பழியும் ஏற்படாதவாறு நாட்டைச்சீராக்கவேண்டிய பொறுப்பு சுயமரியாதை சங்கத்திந்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்புதிய நிலையைப்பற்றியும் நாம் எத்துறையில் சென்று கொண்டிருக்கிறோமென்பது பற்றியும் ஒருவாறு தெரிந்துகொள்ளுதல் நலம்.

இந்தியபொதுமக்களை ஈடேற்றும் முறை எது என்பதுதான் இப்போது அனைவர் உள்ளங்களிலும் கொதித்துக்கொண்டிருக்கும் பிரச்னை. புரோகிதர்களும்யதேச்சாதிகாரிகளும் ஒரு புறமும், அரசனும் முதலாளிகளும் மற்றொருபுறமும் கொள்ளையாடுவதினின்று மீட்பது என்னும் முக்கியமான பிரச்னைப்பற்றி எந்தச்சீர்திருத்தக் காரராவது, அரசியல் வாதியாவது, எதிர்த்துப் போராட முன்வரவில்லை. தனிப்பட்ட நபர்கள்மீதும் குழுவினர் மீதும், புரோகிதமும் மதமும், பண்டைய வழக்கங்களும், சமூகச்சடங்குகளும், அன்னிய ஆதிக்கமும், சுமத்தியுள்ள சுமைகளை நீக்கவேண்டிய தவசியந்தான் என்னும் கொள்கையை வாயளவில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பழைய முறைகளில் பற்றின்றி தேசிய புனருத்தாரணத்திற் குழைக்க விரும்புகின்றவர்கள் 1000க்கு ஒருவர்கூட கிடைப்பதரிது. குற்றங்களெல்லாம் குவிந்துகொண்டிருக்கின்றன. இந்த அநீதியை நாடு இனி சகிக்கமுடியாது. கூடிய சீக்கிரம் விமோசனம் ஏற்படத்தான் வேண்டும்.

பசிப்பிணியே பிளேக்கு. நோய்க்குக்காரணம்.

இந்தியாவின் வாழ்க்கையில் மிகக் கொடுமையான நிலை அதன் வறுமையேயாகும். மக்கள் மேலும் மேலும் வறுமை எய்திக்கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் கீழ்நிலையிலுள்ளவர்களின் நிலை ஒன்றுமில்லாதவாறு கேவலமாயிருப்பதாக தோழர் ஜே. எஸ். காட்டன்போன்ற தக்கபெரியார்கள் கருதுகிறார்கள். விவசாயத்தொழிலாளிகளான 20 கோடி ஜனங்களுள்பட இந்தியத் தொழிலாளியின் மொத்த எண்ணிக்கை, இந்திய ஜனத்தொகையில் 100-க்கு 93 ஆகும். இந்திய மக்களின் சராசரி வருஷ வருவாய் ரூ. 17—0—0 அதாவது சராசரி தினசரி வருவாய் 9 1/3 பைசா என தோழர் வில்லியம் சி. ஐ. இ. கணக்கிட்டிருக்கிறார். அஸ்ஸாம் பிரதம கமிஷனராகவிருந்த சர். சார்லஸ் எலியட் கீழ்கண்டவாறுகுறிப்பிட்டிருக்கிறார். ''விவசாயிகளுள் பாதிபேருக்கு அதிகமானவர்கள் வருஷமுழுதும் ஒரு வேளையுணவிற்குமேல் உண்டிருக்கமாட்டார்களெனக்கூற நான் சிறிதும் தயங்கேன்'' அது போலவே சிறந்த இந்திய சரித்திராசிரியரான சர். வில்லியம் ஹண்டர் 4 கோடி மக்கள் தம் பசியைத்தணிக்க வழியறியாதாராயிருக்கின்றனரெனக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மகா கொடிய வறுமையே பிளேக் நோய் ந்து வெகுவாக [illegible] காரணமாம். 1901 வருஷம் 3-லட்சம் பேரும், 1902-வருஷம் 5 லட்சம் பேரும், 1904-வருஷம் 10 லட்சம் பேரும் இந்நோயினால்மடிந்தனர். இந்திய பஞ்சத்திற்கு ஜனங்களின் கொடிய வறுமையே காரணமாகும்.

பிரிட்டிஷ் ஆட்சிகாலமும், புரோகிதர்களின் கூட்டுறவும்.

பண்டையச் சிறப்புமிக்க இதர தேசங்களைப்போலவே சமூகங்களை நடத்துவிக்கும் உன்னத ஆதிக்கம், புரோகிதர்கள் வசமே இந்தியாவிலுமிருந்தது. குருக்கள் மொழியே சட்டம். விடுதியின்றிவதியும் வைசாரியின் கோபத்திற்கு மகத்தான மன்னர்களும் தப்புவிக்க முடியாது; இதுதான் மனுகாலம். குருக்களின் ஆதிக்கம் ஒடுங்கி மன்னர்களின் ஆதிக்கம் சமீபகாலத்தில்தான் அதாவது பாடலிபுத்ர ராஜ்யம் ஏற்பட்ட பிறகுதான் ஓங்கியது. சீனசாம்ராஜ்யமும், எகிப்தியசாம் ராஜ்யமும், பாபிலோனியசாம் ராஜ்யமும், குருக்களின் ஆதிக்கத்தை வென்று பல வாண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவில் இந்நிலை ஏற்பட்டது. இந்த இரண்டு காலங்களிலும் ஆட்சி சம்பந்தமான விஷயங்களிலும் இது போன்ற விஷயங்களிலும் மன்னர்களுக்கும் குருக்கள்களுக்கும்தான் ஆதிக்கமிருந்துவந்தது. பொது ஜனங்கள் அவர்களுக்கு ஊழியஞ் செய்யத்தான் வேண்டியிருந்ததே ஒழிய அதன் லாபங்களுக்கோ வரவிற்கோ உரியவர்களாகவில்லை. மூன்றாவதாக மன்னர்கள் வசமிருந்த ஆதிக்கம் வியாபாரிகளான முதலாளிகள் கைக்கு மாறியது. இக்காலத்தில் தமக்குள்ள ஆதிக்கத்தைக்கொண்டு மன்னர்களின் உதவியினர்களாயிருந்து வந்தனர். எனவே குருக்களும் முதலாளிகளும் பரஸ்பரம் உதவியை நாடினார்கள். குருக்களும் மன்னர்களும் ஒன்றினார்கள். தம் சௌகரியங்களையமைத்துக்கொள்ள பொது ஜனங்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தக் கொடுஞ்சிக்கலினின்று தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சித்தால் உண்மையிலேயே நசுக்கப்படுகிறார்கள். மக்களுக்குள்ளிருக்கும் பலவகைப்பிரிவுகள்மட்டுமன்றி தொழிலாளி, முதலாளி என்ற பிளவு ஏழைகளின் துயரங்களைப்பெருக்குவதாயிருக்கிறது. மக்கள் ஒன்றுபடாது தக்கபடி தடுக்கவேண்டி குருக்களும் சர்க்காரும் ஒன்றுபட்டு இலங்கிய பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சிக்காலம் இதுதான்.

பிரிட்டிஷாருக்கு இந்தியா ஒரு கொள் முதல் நாடு.

குருக்களின் ஆதிக்க ஆதரவுபெற்று அன்னியநாட்டு ஆட்சிச்சுமை இந்நாட்டில் வேரூன்றிவிட்டது. பிரிட்டிஷ் செய்பொருட்களுக்கு இந்தியா ஒரு கொள்முதல் நாடாக விருந்து வருகிறது. 1927-வருஷம் நடைபெற்ற அகில இந்தியக்கைத் தொழில் வியாபார மகாநாட்டிற்குத் தலைமை வகித்த சர். இப்ராஹிம்

ரஹிமத்துல்லா ‘பிரிட்டிஷார் பொதுநல நோக்கங்கொண்டு இந்தியாவிற்கு வரவில்லை, அவர்கள் உடல் நலங்கருதி வரவில்லை. அவர்கள் இந்தியாவின் தர்மகர்த்தாக்கள் எனப் பாசாங்கு செய்வதைவிடுத்து, வியாபார முன்னேற்றங்கருதியே இங்கிருப்பதாக அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதற்கு ஒட்டவா ஒப்பந்தம் தக்கதோர் விடையாகும். எனவே அரசியல் ஆதிக்கம் பொருளாதாரக்கொள்ளைக்கு இடங்கொடுத்துவிட்டது” இந்திய விஷயங்களின் குறிப்புகள் என்ற நூலில்தோழர் எப். ஜே.வேஷர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். “பிரிட்டிஷாரின் நலன்கள் காரணமாக இந்திய மக்கள் அனைவரையும் எல்லாவிதங்களிலும் அடிமைப்படுத்தி வைத்திருப்பதே பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படையானகொள்கை.”

சமூகக்கொடுமைகளுக்கு தண்டனை அரசியல் அடிமைத்தனம்!

குடியானவர்களும், தொழிலாளிகளும் இதரபொது ஜனங்களும் வலிமையிழந்து வாழ்வதற்கு மதக்கொடுமைகள் எத்தனைத்தூரம் பொறுப்புடையனவோ, அத்தனைதூரம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிமுறையும் பொறுப்புடையதாகும். வகுப்புமுறையுடைய மதங்காரணமாகத் தொழிலாளர்கள் தம் நேர்மையான உரிமைகளை இகழ்ந்தனர். ஒற்றுமை பெறுவண்ணம் தடுக்கப்பட்டனர். இவ்வாறுகச்சமூகம் கொடுமைப்படுத்தப்பட்டு வலிமையிழந்து அறியாமையில் மூழ்கிக்கல்வியற்றிருக்கிறது. மதத்தின் இந்தச்செயல் தான் ஆங்கிலேயரான அந்நியர் அரசியல் ஆதிக்கம் இந்நாட்டிற்பெறுவதற்கு மூலகாரணமாயிருந்தது. ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்கு மக்கள் தலைசாய்த்து வாயதிறவாது அடக்கி நடக்க வேண்டியதற்கும் மதத்தின் இந்தச்செயல்தான் காரணமாகும். சமூகக்கொடுமைகளுக்கு தண்டனையாகவே அரசியல் அடிமைத்தனம் இப்போது ஏற்பட்டிருக்கிறது ஒருமுறை இந்த அடிமைத்தனம் ஏற்பட்டபிறகு அது பெருகிக்கொண்டேபோகிறது. குருக்களும் மன்னர்களும் வெகுவாக ஒன்றுவதனலே சமூகக்கொடுமைகளும் பலவீனமும் மிகுந்து, மக்கள் புத்துயிர் பெறவோ நாடு புனருத்தாரணம் செய்யப்படகூடாதபடி தக்கதடை ஏற்பட்டிருக்கிறது. பெரிதும் வருந்தத்தக்க நிலையில் நம் நாடிருப்பதற்குக் காரணமாயுள்ள பண்டைய வழக்கங்களையே நிரந்தரப்படுத்துவதையே கொள்கையாக மதமும் அரசும் கொண்டிருக்கின்றன.

பிரித்தாளுவதே பிரிட்டிஷ் ஆக்ஷி

பிரிட்டிஷ் ஆட்சிமுறை இந்தியாவில் ஏற்பட்டது. ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் “ஏஷியாட்டிக் ஜர்னல்” என்னும் பத்திரிகையில் “கர்நாடகன்” என்னும் புனை பெயருடன் கீழ்கண்டவாறு எழுதியிருக்கிறார்:— “இந்திய நிர்வாகத்தில் அரசியலிலும், சிவில் துறையிலும், இராணுவத்துறையிலும் பிரித்தாளுவதே கொள்கையாயிருக்கவேண்டும்” 1857 வருஷம் லெப்டினெட் கர்னல் ஜான் கொக் கீழ்க்கண்டவாறு எழுதினார். ஆங்கிலேயருக்கு அதிர்ஷ்டவசமாக இந்தியாவில் உள்ள பலவித மதத்தினருள்ளும் ஜாதியாருள்ளுமிருக்கும் பாகுபாட்டை முழுதும் நிலை நிறுத்துவதே ஆங்கிலேயரின் வேலையாயிருக்க வேண்டுமேயல்லாது அவர்களை ஒன்றுபடுத்த முயற்சிக்கக் கூடவே கூடாது. 14-5-1859ம் தேதிபம்பாய் கவர்னர் லார்ட் எல்பின்ஸ்டன் எழுதியுள்ள குறிப்பும் மிக முக்கியமானது. அது வருமாறு:- “பிரித்தாளுவது பழைய ரோமர்களின் கொள்கையாயிருந்தது; அது நமது (ஆங்கிலேயரின்) கொள்கையாயிருக்க வேண்டும். ஜான்ஸ் ட்ராச்சே என்பவர், இந்தியாவில் ஆங்கிலேயரின் அரசியல் நிலையில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தியமக்களுள் விரோதபாவமுள்ள மதஸ்தர்கள் அடுத்தடுத்து வாழ்வதாம், எனக்குறிப்பிடுகிறார். தீமைவிளைவிக்கத்தக்க சாதிப்பாகுபாட்டை நிலைநிறுத்துவதே சர்க்காரின் சிவில் கொள்கையாகவும் இராணுவக்கொள்கையாகவுமிருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு உள்வகுப்பினரையும், ஜாதியினரையும், குழுவினரையும், மதத்தினரையும் அவரவர்கள் தேவைக்குத்தக்கபடி சரிப்படுத்திக்கொண்டு, ஒருவர்மீதொருவர் வெறுப்புடனும், விரோதத்துடனும் நடந்து கொள்ளும்படி தூண்டப்படுகிறார்கள்.

சமூகத்தைப் பிளவுபடுத்தி, எதற்கும் மதத்தையே அடிப்படையாகக்கொண்டதோர் கொள்கையைத் தான்வெள்ளைக்காரிதத்திலும் காண்கிறோம். இது பிரிட்டிஷார் ஆதிக்கத்தை நிலைநாட்டவும், பொதுஜனங்களைக்கொள்ளையிடவும், மதத்தீமைகளை நிரந்தரப்படுத்தவுமே ஏற்பட்டதாகும்.

பண்டைக்காலந்தொட்டே குடிஜனங்களின் பெரும்பாலோரான தொழிலாளர்களின் நிலை ஓங்காதபடி பல பெருந்தடைகளிருந்து வந்திருக்கின்றன. பிரிட்டிஷ் சர்க்காரின் வியாபாரஆதிக்கம் மற்றுமோர் தடையாகவமைந்தது.

இந்திய ஏழ்மைக்கு பிரிட்டிஷ் ஆக்ஷியும், முதலாளிவர்க்கமும் காரணம்!

பொருள் திரட்டவோ, அறிவு பெறவோ, கல்வி கற்கவோ தொழிலாளிக்கும் விவசாயிக்கும் சந்தர்ப்பம்அளிக்கப்படவே இல்லை. தொழிலாளிகளின் சந்ததியில் மகாமேதாவியான அறிவாளி தோன்றினால், உயர்ந்த வகுப்பாருள் செல்வாக்குள்ளவர்கள் அவருக்குப் பெரும் பெரும் பட்டங்கள் வழங்கித்தம் குழுவுடன் இணைத்துக்கொள்ளுகின்றனர். இவருடைய பொருளும் ஆஸ்திகளும், அறிவும் பிறவகுப்பினருக்குப் பயன்படுகிறதே யொழிய, அவர் எய்தியுள்ள நிலைமையினால், அவர் பிறந்த வகுப்பார் எத்தகைய பயனையும் அனுபவிப்பதில்லை. ஏழைகள் செமிந்து வைத்திருந்த சிறு பொருளை குருவும் செட்டுங்கோலாசனும் கவர்ந்து சென்றனர். பணக்காரர்களும் முகஸ்துதியாளரும் நேர்மையான உழைப்பும் எளிய வாழ்க்கையையும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்: ஏழைகள் பற்றுக்கொண்டுள்ள மதங்காரணமாக அவர்கள் மோக்ஷமடைவார்களென்க்கூறினர்கள். பொதுவாக அவர்களுடைய எளிய நிலையில் ஒரு விசேஷஉன்னதத்தன்மை விளங்குவதாக அவர்களை நம்பும்படிச்செய்தனர். இது எதையொத்திருக்கிறதென்றால் சமுதாய அடிமைத்தனங்காரணமாக ப்பெண்கள் ஒரு விசேஷ உன்னத நிலையை அடைகிறார்களென ஆண்கள் அவர்களிடம் கூறி அதைநம்பும்படி செய்வதை யொத்திருக்கின்றது.

குருமாரும் அரசர்களும் ஒன்றியதனலே ஒரு சிலர்மட்டும் பொருள் திரட்டவும், ஆதிக்கங்கள் பெறவும் சௌகரியங்கள் அமைத்துக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் வெகுவாய் ஏற்பட்டன. ஒரு வேலையும் செய்யாத ஒரு சிறு சாராருக்கு விளைப் பொருள்களின் பெரும்பகுதி உரியதாகிறது. இந்தியாவில் தொழிலாளியின் சராசரி வயது 23 ஆனால் இங்கிலாந்து முதலிய மேனுடுகளில் தொழிலாளியின் சராசரி வயது 46 இந்தியத் தொழிலாளியின் சராசரி தின வருவாய் 9. பைசா, ஆனால் மேனுடுகளிலுள்ள தொழிலாளியின் சராசரி தின வருவாய் ரூ. 2 நெடுநாட்களாக இந்தியத் தொழிலாளர்கள் அரைப்பட்டினியாயிருந்த காரணம் பற்றி அவர்கள் வலியிழந்து இருக்கின்றனர். இந்தியாவில் பசிப்பிணிகாரணமாக லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஆண்டு தோறும் மடிகின்றனர். முதலாளிகள் ஆதிக்கமிக்க நாடுகளனைத்திலும் இதேகதிதான். இந்தியத்தொழிலாளி தன் வேலைநேரத்தைக் குறைக்கவேண்டுமென்றும், சம்பள விகிதத்தையுயர்த்த வேண்டுமென்றும் பாடுபடுகிறார்கள். இங்கிலாந்திலுள்ள தொழிலாளர்கள் சர்க்காரைக்கைப்பற்ற பாடுபடுகிறார்கள். ருஷியாவிலே தொழிலாளர்கள் தம் சர்க்காரை நிறுவிவிட்டனர்.

விளைப்பொருட்களைப் பெருக்கவும் செய்வினைச்செலவுகளையும் வீணுக்குவதையும், சுருக்கவும் எத்தகைய விவசாயக் கொள்கைகளையும் சர்க்கார் மேற்கொள்ளவில்லை. வருஷத்தில் பாதி நாட்கள் விவசாயிகள் வாளாவிருக்கின்றனர். தொழிலாளர்கள் அதிக வேலைசெய்து, தொழிலாளர்களான மற்றும் பலருக்கு வேலையின்றிச் செய்து விடுகிறார்கள். உலகப் பொருளாதாரக் குழப்பம் காரணமாக வேலையில்லாதாரின் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டேபோகிறது. இந்தியாவில் இப்போது 5 கோடிப்பேர் வேலையில்லாதிருக்கின்றனர். இவர்களுள் மூன்றுகோடிப் பேர் தமக்கு வேலை கிடைக்கும் என்னும் நம்பிக்கைச்சிறிது மின்றி அடிமைகளாகவே வாழுகின்றனர்.

“பிரிட்டிஷ் ஆட்சியில் ஜனங்களின் எண்ணிக்கை பெருகியதென்றால், ஜனங்கள் பொதுவாக முன்னேற்ற மெய்தியிருக்கிறார்களெனக் கூறுதற்கில்லை; முன்னேற்றத்திற்கு இரு வழிகளுண்டு; முதலாவது தொழிலாளிகளின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது, விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கும் தொழிலாளிகளின் கருத்தை வேறு நெறிகளில்செலுத்துவது, இவ்விரு துறைகளிலும்பிரிட்டிஷ்சர்க்கார் புகவில்லை” என்று தோழர். ஜே. எஸ்.காட்டன் கூறுகிறார். விளைவு சம்பந்தமாகவும்தொழில்சம்பந்தமாகவும் உள்ளபுள்ளி விபரங்கள்குறைபாடுடையன வாகவே யிருக்கின்றன. விளைபொருட்களின் பெருமானம் இன்னதென்றாவது, விவசாயம் கைத்தொழில் முதலியவற்றின் வருமானங்களைப்பற்றியாவது மதிப்பிடத்தக்க திட்டம் எதுவும கிடையாது. ‘தற்கால இந்தியாவும் அதன் பிரச்சினைகளின் கடவுளும்’ என்னும் தன் நூலில் டாக்டர் வி. என். ருதர்போர்டு கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது:— பொதுஜனக் கல்வியில் அசட்டை, கிராமங்களின் சுகாதாரத்திலும், மருத்துவ உதவியிலும் அசட்டை, ஏழைகளுக்கு விடுதிகள் அமைப்பதில் அசட்டை; லேவாதேவிக்காரர்களினின்று ஏழைகளைக் காப்பதில் அசட்டை; விவசாயத் துறையைப் பெருக்கி முன்னேற்றுவதில் அசட்டை; இதைக்கருதி பார்க்குமிடத்து, பிரிட்டிஷாருடைய ஆட்சியானது ஜனங்களுடைய நன்மைக்கு மிகவும் திருப்திகரமாக இல்லை. அதாவது, ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரைக் கொள்ளையிடுவதாகும். “நமது (ஆங்கில) ஆட்சியின் பெரும் ஜனசமூகத்தின் உயிர்படிப்படியாகக்குன்றி விரைவாக மடிந்துகொண்டு வருகிறது” என்றுதோழர்எச். ஹின்ட்மன் என்பார் “இந்தியாவின் பெருங்கடனும் சிக்கல்களும்” என்னும் நூலில் கூறியுள்ளார்.

ஆண்கள் சமூகத்தை தவிடு பொடியாக்குவதே பெண்கள் விடுதலை.

பெண்கள் தம் அடிமைத்தனத்தினால் சலிப்படைந்திருக்கிறார்கள். தாம் விடுதலை பெற போராடவேண்டுமென உறுதிகொண்டிருக்கின்றனர், தம்மைப் பிறர் சொத்தாக உபயோகிக்க இனி அனுமதிக்கமாட்டார்கள். 2-கோடிப்பெண்கள் மீது கைம்மையை பலவந்தமாகச் சுமத்தியுள்ள மதத்தையும், ஆண்கள் சமூகத்தையும் தவிடுபொடியாக்க உறுதி கொண்டுவிட்டனர்.

(தொடரும்)

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
5.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ...	0—6—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
7.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
	The crux of the Indian Problem By Dr. PARANJPYE (in English.) விலை ரூ.	1—0—0
	"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ.	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒவ்வொரு அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் $6\frac{1}{2} \times 4\frac{3}{4}$ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ 1-க்கு 0—12—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 12—8—0 வீதம் கமிஷன்கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 0—12—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். முன்பணமில்லாத ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

சுயமரியாதை தங்கரத்தினத் தெம்மாங்கு.

இது விருதுநகர் 3-வது ச. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை		ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட	,,	0-12-0
,, 100க்கு	,, ,,	5-4-0

தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணா ஸ்டாம்புஅனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.
காகிடாலையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராதஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை-0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அணா ப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு

ஜார்ஜ் பெர்னாட்ஷாவின், அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைப்பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 4—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்களுக்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்களுக்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:— மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.

பண்டிட் ஆனந்தரின், அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துகொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தாராதலைப்படவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞர்ன் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.

விலை அணா 0—1—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணா. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.

முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம்.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.

விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது.

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

"குமார விகடன்"

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

உங்கள் வேலைக் கஷ்டங்களினிடையே சிரித்து மகிழ நமது குமார விகடனைப் படியுங்கள்.

சிறந்த கதைகள், ஆழ்ந்த பொருள்களுள்ள நகைச்சுவை ததும்பும் கட்டுரைகள், விகடங்கள், தமாஷ்கள், ஏராளமான படங்கள், சிறுகதைகள், பரிசப்பந்தயங்கள் முதலியன நிறைந்து கிடக்கின்றன. அவை ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு வரியும் நகைச்சுவையைத் தந்து இன்பமூட்டுவன.

ஸ்ரீமுக ஹு சித்திரை மீ 1-உ முதல் வெளிவரும். பழைய பிரதிகள் கிடைக்கமாட்டாது. ஆகையால் முதலிலிருந்து சந்தாதாராய்ச் சேர்வதே நலம்.

முதல் வெளியீட்டில் 25 ரூபாய் பந்தயமென்றும் ஒருவருஷ பத்திரிகை இனாம் பந்தயமென்றும் ஆக இரண்டு பந்தயங்கள் வருகின்றன.

டிம்மி 1/8 அளவில் 80 பக்கங்கள் நேர்த்தியாகஅச்சிடப்பட்டது

வருட சந்தா ரூ. 1—4—0 சந்தா மணியார்டராக அனுப்பினால் 2 அணா செலவு, வி. பி. செய்தால் 5 அணா ஆகிறது. ஆகையால் சந்தா தொகையை மணியார்டர் செய்வதே நலம்.

மானேஜர், குமார விகடன், காஞ்சீபுரம்.

குறிப்பு:—எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை—நல்ல கமிஷன் கொடுக்கப்படும். விவரத்திற்கு எழுதவும்

உண்மை விளக்கம் பிரஸ் பக்கத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப் பட்டது.